25-1-1962

Phone No. 3249 மலாய் 10-சதம் பர்மா 1-6-0 இலங்கை 7-சதம்

TAMIL MANI REGD. NO. M. 3384

# தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி.

மணி 7 ஓசை 12 | சென்னை—விஷு வஷ தைமீ 12உ ஞாயிற்றுக்கிழமை (25-1-42) | விலை ஒரு அணு

## -: பகற் கனவு! :-

ஐரோப்பா, ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஆசியா முதலிய சகல தேசங்களையும் ஜெயித்து, கடைசியில் உலகின் மறு கோடியிலுள்ள அலாஸ்காவரை எட்டிப் பார்த்துவிடலாமென்று ஹிட்லர் மனோராஜ்யம் செய்தார்! பல தேசங்களை மட்டுமல்ல; அட்லாண்டிக், பாஸிபிக் போன்ற சகல சமுத்திரங்களிலும் அவருடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிவிடலாமென்று மனக் கோட்டை கட்டினுர்! இறுதியில் அவர் கண்டதென்ன? அவர் எண்ணமெல்லாம் வெறும் பகற்கனவு என்பதை அறிந்தார்! அவர் நிலைமையை உணர்ந்தார். ஹிட்லரை இவ்வாறு உணரும்படி செய்தது ரஷியாதான். ரஷியாமீது படையெடுத்தபின்னரே ஹிட்லர் எண்ணமெல்லாம் வெறும் கனவு, அவர் எண்ணம் ஈடேறப் போவதில்லையென்பது வெட்ட வெளிச்சமாயிற்று! இனிமேல் ஹிட்லர் என்ன செய்வார்? மீண்டும் அதே பகற்கனவில் நம்பிக்கை வைத்து ஏமாறப் போகிருரா, அல்லது நியாயமான வழிக்குத் திரும்பப் போகிருரா? பொறுத்துப் பார்ப்போம்.

சொக்கநாதன் ◘ தொடர் கதை

# ரஞ்சிதம் எறிந்த குண்டு!

## கமலம் ஏந்திய வாள்!

தஞ்சை அரண்மனையில் நடந்த சதிகளை ஆழமறிந்து கொள்ளுவது அவ்வளவு சுலபமல்ல. எந்தப் பக்கம் திரும்பினாலும் சதி; யாரைப் பார்த்தாலும் சதிக்காரராகவே இருந்தனர். அவர்கள் எந்த நோக்கத்துடன் சதிசெய்து வந்தனரென்பதை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். ராணி, ரஞ்சிதம் அங்கப்பன் முதலியோர் சதி செய்ததின் நோக்கம் தஞ்சை சிம்மாசனத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பது. தஞ்சை அரசர் வம்சத்தை கருவறுத்துவிட அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால், தஞ்சை இளவரசர் ஏன் சதியில் இறங்கினார்? அரண்மனையில் திடீர் திடீரென்று தோன்றி மறைந்த மாய சேவகனின் சதி என்ன? அவனுடன் சேர்ந்திருந்த கமலம், முதலியோர் அந்தரங்க நோக்கம் என்ன? யாருக்கும் தெரியாது; எல்லாம் மர்மமாகவே இருந்தது! ஆனால், மாய சேவகன், கமலம் முதலியோர் நல்லெண்ணத்துடன் தஞ்சை அரசர் வம்சத்தைக் காப்பாற்றச் சதிகாரர்களை எதிர்த்து வந்தனரேயொழிய, அவர்களிடம் கெட்ட எண்ணம் இருந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், அவர்கள் போக்கு என்னமோ விபரீதமாக இருந்தது!

சதிகாரர்களான ரஞ்சிதம், அங்கப்பன் ராணி மூவரும் ஆதியில் ஒன்று சேர்ந்து சதியில் இறங்கினர்; ஆனால், சுயநலம் குறுக்கிட்டது. ஒருவரையொருவர் விழுங்கி ஏப்பமிட நினைத்தார்கள்! தஞ்சை சிம்மாசனம் அவர்களிடையே கெட்ட எண்ணத்தை உண்டுபண்ணியது. கடைசியில் அவர்கள் கெடு புத்தியே அவர்களுக்கு வினையாக வந்து முடிந்தது. ஒருவரையொருவர் பகைக்கலாயினர்; ஒருவரையொருவர் பழி வாங்கச் சதியில் இறங்கினர். ராணியையும், ரஞ்சிதத்தையும் அங்கப்பன் பழி வாங்கத் தீர்மானித்தான்; அங்கப்பனையும், ராணியையும் ரஞ்சிதம் பழி வாங்க உறுதிகொண்டிருந்தாள். அங்கப்பனையும், ரஞ்சிதத்தையும் தொலைத்துவிட்டு ராணி உபத்திரவமில்லாமலிருக்க நினைத்தாள். அங்கப்பனே பகிரங்கமாக இந்தச் சதியில் இறங்கினான்; ராணியையும், ரஞ்சிதத்தையும் மட்டும் ஒழிக்க அவன் நினைக்கவில்லை; தஞ்சை அரசரையும், இளவரசரையும் ஒழித்து விட்டு, இளவரசி மோகனாவை மணந்து, தஞ்சைக்கு அரசனாக எண்ணினான். அவன் எண்ணத்தைக் கண்ட ராணி அவனை வெறுத்தாள்; ரஞ்சிதமும் வெறுத்தாள். மோகனாவுக்கோ, அங்கப்பனின் அந்தரங்க நோக்கம் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை; அங்கப்பனை அடியோடு வெறுத்தாள். அவனைக் காணுவதே அவளுக்குப் பேயைக் காணுவது போலிருந்தது. இந்த நிலைமையில், தஞ்சை ராணிக்கும், ரஞ்சிதத்துக்கும் வைத்தியர் உதவி கிடைத்தது. வைத்தியரைக் கொண்டு, அங்கப்பன், இளவரசி மோகனா, கமலம், பாட்டி முதலிய சகலரையும் எமலோகத்துக்கு அனுப்பிவிட ரகசியமாகவேலை செய்து வந்தனர். வைத்தியரும் ராணிக்கு உடந்தையாக இருந்து அரண்மனையில் பல திருவிளையாடல்கள் புரிந்துவந்தார்!

இவர்கள் எல்லோருக்கும் எமன் போலிருந்தான் மாய சேவகன். அவனை ஒழிக்கும் பொறுப்பையும் ராணியும், ரஞ்சிதமும் வைத்தியரிடமே விட்டு வைத்தனர். வைத்தியர் அதற்காக தருணம் பார்த்துக்கொண்டிருந்தார். கடைசியில் ரஞ்சிதத்தை அழைத்துக் கொண்டு மாய சேவகனைப் பிடிக்க சூழ்ச்சி செய்தார். ரஞ்சிதம், வைத்தியர் பேச்சை நம்பி, அவருடன் சென்றாள். இளவரசியின் அந்தப்புரத்துக்குப் பின் பக்கமுள்ள மறைவான ஓரிடத்தில் பதுங்கியிருந்தாள். அந்த இடத்தில் தான் பல தடியர்கள் கூடியிருந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு வார்த்தையும் ரஞ்சிதத்தின் காதில் விழுந்தது; என்றாலும், அவளால் எதுவும் அறிந்து கொள்ள முடியவில்லை. அங்கிருந்து தப்பி போகவோ மார்க்கமில்லை. பயத்தால் தேகமெங்கும் வியர்வை கொட்டியது; அவள் உயிருக்கு ஆபத்து வருமோவென்று நடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் உயிரை எப்படியும் பாதுகாப்பதாகச் சொல்லிய வைத்தியரையும் காணவில்லை. இந்தச் சமயத்தில் அந்த இடத்துக்கு வேறொரு தடியன் வந்தான்; அங்கு பதுங்கியிருந்து பேசிக்கொண்டிருந்த ஐந்தாறு பேர்களையும் கூப்பிட்டான். அவர்கள் வெளியில் வந்ததும், அவர்கள் எல்லோரும் அங்கு பதுங்கியிருந்து பேசிக் கொண்டிருந்ததைக் கண்டித்து, கையிலிருந்த சவுக்கால் ஒருவனுக்கு ஓங்கி ஒரு அறை கொடுத்தான்; அவன் அலறித் துடித்துக்கொண்டு ஓட்டமெடுத்தான. உடனே அங்கிருந்த எல்லோரும் அங்கு மிங்குமாகச் சிதறி ஓடினர். கடைசியில் நந்தவனத்துக்குச் சென்று, அங்குள்ள குடிசைகளின் வழியாக வெளியே சென்றனர். அவர்கள் வெளியில் சென்றதும், அவர்களை வெருட்டியடித்தவன் நந்தவனத்துக்குச் செல்லும் கதவை மூடித் தாழிட்டான். உடனே கமலம் அறையை நோக்கி ஓடினான்; அறை பூட்டப்பட்டிருந்தது; அங்கிருந்து இளவரசியின் அறைக்குச் சென்றான். அதுவும் தாழிடப்பட்டிருந்தது. இளவரசியின் அந்தப்புரத்தின் பின் பக்கம் சென்று, அங்கு மறைவான ஓர் இடத்தில் பதுங்கி இருந்துகொண்டு நாலாபக்கமும் கவனித்தான். யாரையும் காணவில்லை; மெதுவாக ரஞ்சிதத்தைக் கூப்பிட்டான். இரண்டொரு முறை கூப்பிட்டும், ரஞ்சிதம் வரவில்லை; அவன் ஆச்சரியமடைந்து அங்கிருந்து கிளம்பினான். அவன் போனதும், ரஞ்சிதம் மறைவிலிருந்து வெளியில் வந்தாள்; அவள் உயிருக்கு ஆபத்து வருமென்று அஞ்சி, கால்கள் நடுங்க ஓட்டமெடுத்தாள்; திடீரென அவளுக்கு எதிரே வேறு இரு தடியர் அவளை நோக்கி வந்துகொண்டிருந்ததைக் கண்டு, சட்டென ஒரு பெரிய தூணுக்குப் பின்னால் சென்று மறைந்தாள்! அவள் மறைந்த அதே சமயத்தில், படீரென வெடிக்கும் சப்தம் கேட்டது!

படீரென வெடிக்கும் சப்தம் கேட்டதும், எதிரே வந்த இரு தடியரும் திடுக்கிட்டு நின்றனர்! அவர்களுக்குச் சமீபத்தில் புகை குபு குபுவென்று எழும்பியது; அவர்கள் இருவராலும் அதைச் சமாளித்துக் கொண்டு அங்கிருந்து தப்பியோட முடியவில்லை. அதே சமயத்தில் தூணுக்குப் பின் மறைந்திருந்த ரஞ்சிதத்தாலும் தப்பியோட முடியவில்லை. புகைக்குச் சமீபத்தில் அவள் நின்று கொண்டிருந்ததால், அந்த புகையின் வேகத்தை அவளால் சமாளிக்க முடியவில்லை; புகையின் வேகம் அவள் புத்தியை கலக்கி விட்டது; தலை சுழன்றது; மயக்க முற்றுத் தூணுக்குப் பின்னால் பொத்தென்று விழுந்தாள்!

மற்ற இரு தடியரும் புகையின் வேகத்தைத் தாங்க முடியாமல் தள்ளாடினர்; என்றாலும், சிரமத்துடன் புகையைச் சமாளித்துக் கொண்டு ஓட முயற்சித்தனர். இரண்டு மூன்றடி எடுத்து வைத்து ஓட எத்தனித்த சமயத்தில், திடீரெனப் படீர் படீரென்று அவர்கள் இருவர் முதுகிலும் உதைகள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்தன. உதையின் வேகத்தில் இருவரும் அப்படியே முகங்குப்புறக் கீழே விழுந்து மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தனர். அவர்களுக்கு உதை கொடுத்த மாய சேவகன் சட்டென மறுபுறஞ் சென்று மறைந்தான்!

இற்குள் புகையின் வேகம் குறைந்தது; ஆனால், மூர்ச்சித்து விழுந்த இரு தடியரும், ரஞ்சிதமும் தரையில் சவங்களைப்போல் கிடந்தனர். மாய சேவகன் முதலில் ரஞ்சிதத்தின் அருகில் சென்றான்; அவளைத் தூக்கிக் கொண்டு நந்தவனத்துக்குச் சென்றான். அங்குள்ள தாமரை தடாகத்தின் அருகிலுள்ள பெஞ்சியின் மீது அவளைக் கிடத்தினான்; மீண்டும் அரண்மனைக்கு வந்து, அங்கு மூர்ச்சையுற்றுக் கிடந்த இருவரையும் மட மட வென்று இழுத்துக் கொண்டு போனான்; அவர்கள் இருவரையும் அங்குள்ள வேலைக்காரர் குடிசையினுள் கிடத்தினான். மீண்டும் அரண்மனைக்கு வந்து, அங்கு வேறு யாரும் இருக்கிறார்களா வென்று மூலை முடுக்குகளெல்லாம் புகுந்து பார்த்தான். அங்கு வேறு யாரையும் காணவில்லை; உடனே கமலம் அறைக்குச் சென்றான்; அங்கும்

(15-ம் பக்கம் பார்க்க)


LEPROSY, ASTHMA & T. B. SPECIALIST.

எனது சகோதரர் நாடிப் பரிக்ஷையில் மகா நிபுணர் வைத்தியபதி

R. M. கருப்புசாமி பிள்ளை

எமது சென்னை வைத்தியசாலையில் இருக்கிறர்.

உங்கள் குடும்பத்தில் யாருக்கு என்ன வியாதியிருந்தாலும் சரி! அவரிடம் நேரில் வந்து கன்சல்ட் செய்யுங்கள். நேரில் வரமுடியாதவர்கள் வியாதியை எழுதினால் மருந்துகள் V. P. P. யில் அனுப்புவார்கள். [கன்சல்டிங் பீஸ் இல்லை.]

கன்சல்டிங் நேரம் } காலை 7-மணி முதல் 10-மணிவரை. மாலை 4 ,, 7 ,,

கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை, அந்த க்ஷணமே நிறுத்தும். சூதகக்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதகக் கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலை வலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்துகளெல்லாம் தீர்த்து, கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும் 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது உண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும். கை பார்க்க நேரில் வரவேண்டியதில்லை. எழுதினால் போதும்.

கியாட்லாக் இனும். ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும்.
1 புட்டி ரூ. 2. ஒரே தடவையில் 3 புட்டி ரூ. 5.

வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி,

சித்த வைத்தியசாலை, பழனி.
(ஸ்தாபிதம் 1900.)

பிராஞ்சுகள்:-16, (மேல்மாடி), திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை. 68, செட்டியார் தெரு, கொழும்பு.

மனோரதம்

# பட்ட கதையா, சுட்ட கதையா?

## வாயில் நுழையாதே

## விலைக்கு வாங்கிய சனியன்

## சூரியனே அஸ்தமிக்காது!

## கிள்ளுக் கீரையா என்ன?

பாட்டி ஒரு கதை சொல்லென்றால், "நான் பிறந்த கதை சொல்லவா, வளர்ந்த கதை சொல்லவா, அல்லது, நான் பட்ட கதை சொல்லவா, சுட்ட கதை சொல்லவா?" என்று பாட்டிக்கிழவி கதை ஆரம்பித்து விடுவாள். அந்தக் கதையில்தான் இந்த யுத்த நிலைமை இருக்கிறது. யுத்தத்தைப் பற்றி என்ன கதை எழுதுவதென்பது தெரியவில்லை. ஜப்பானியர் முன்னேறிச் சென்று, தீவான தீவுகளைக் கைப்பற்றுவதைச் சொல்லுவதா, பல ஆயிரக் கணக்கான மைல்கள் தூரம் சென்று யுத்தம் ஆரம்பிக்கும் கதையைச் சொல்லுவதா, அல்லது, பிரிட்டிஷார் ரொம்பச் சாதுர்யமாகப் பின்வாங்கிப் போகும் தீரத்தை வர்ணிப்பதா? எதைச் சொல்லுவது? அப்படியே சிரமப்பட்டுச் சொன்னாலும், அது இலகுவில் புரிகிறதா? இல்லை; ஏன்? இது வரையில் கேள்விப்பட்டிராத ஊரின் பெயர்களும், வாயிலே நுழையாத தீவின் பெயர்களும் சொல்லவேண்டியிருக்கிறது. அந்தத் தீவுகளும், ஊர்களும் எங்கே இருக்கின்றன வென்று தேடிப் பிடிப்பதே பரம சங்கடம்! இந்தச் சங்கடமான நிலைமையில் ஜனங்களுக்கு யுத்தத்தைப் பற்றி என்ன கூறுவதென்பது என் புத்திக்கே எட்டுவதில்லை! யுத்த நிலைமையை அறிந்து சொல்ல, நான் படும் பாட்டைச் சொல்லுவதா, அல்லது, என்னுடைய திண்டாட்டத்தைச் சொல்லுவதா என்றுகூட சில சமயங்களில் நான் நினைப்பதுண்டு. என்றாலும் என்னபாடுபட்டாவது மூளைக்கு எட்டியவரையில் யுத்த நிலைமையை அறிந்து சொல்லித்தான் தீரவேண்டியிருக்கிறது. வாரா வாரம் இந்தத் தொல்லைதான்; இந்தத் தொல்லை என்னை விட்டபாடில்லை; நானும் அந்தத் தொல்லையை விட்டபாடில்லை! தொல்லையும், நானும் தொடர்ந்துதான் போக வேண்டியிருக்கிறது!

ஃ ஃ ஃ

இதே தொல்லையில்தான் இன்று பிரிட்டிஷாரும் அகப்பட்டிருக்கிறார்கள்! அவர்களுக்கு ஒரு தொல்லையா, இரு தொல்லையா? ஊரெங்கும் தொல்லை; நாடெங்கும் தொல்லை! கண்ட கண்ட சமுத்திரங்களிலெல்லாம் தொல்லை! சனியனை விலைக்கு வாங்கிய மாதிரி, எல்லாச் சனியனையும் பிரிட்டிஷார் வலிய வாங்கி வைத்துக்கொண்டு சங்கடப்படுகிறார்கள்! பெரிய ஏகாதிபத்யத்தையும், சகல சமுத்திரங்களையும், சமுத்திர அலைகளையும் பிரிட்டிஷார் அடக்கியாள நினைத்ததுதான் இந்தச் சனியன்களுக்கெல்லாம் மூல காரணம்! சூரியனே அஸ்தமித்து அறியாத ஒரு பெரிய ஏகாதிபத்யத்தைப் பாதுகாப்பதென்றால், அது என்ன கிள்ளுக்கீரையா? ஏகாதிபத்ய நாடுகளைச் சுரண்டும்போது இன்பமாகத்தானிருக்கும்! ஆனால், அந்த ஏகாதிபத்ய நாடுகளுக்கு ஆபத்து வந்தால், சூரியன் அஸ்தமிப்பதைக்கூடக் கவனியாமல் பாடுபடத்தான் வேண்டும்! இன்பத்துக்கு மட்டும் ஏகாதிபத்யம்; துன்பத்துக்கு ஏகாதிபத்யம் இல்லையா? பிரிட்டிஷாராகவே தேடிக்கொண்ட ஏகாதிபத்யத்தை எப்படிக் கைவிட முடியும்? இன்பத்திலும், துன்பத்திலும் அந்த ஏகாதிபத்யத்தைக் கட்டியழ வேண்டியதுதான்! பிரிட்டன் இந்த ஏகாதிபத்யத்தை விடப்போவதில்லை; ஏகாதிபத்யமும் பிரிட்டனை விடப்போவதில்லை. உடும்புப் பிடியாய் ஒன்றையொன்று பிடித்துக்கொண்டுதானிருக்கவேண்டும்!

ஃ ஃ ஃ

இன்று நடைபெறும் பாஸிபிக் யுத்தத்தை எடுத்துக் கொள்ளுவோம். அங்கு ஜப்பான் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. ஜப்பானை எதிர்த்து முறியடிப்பதில் பிரிட்டனோ, அல்லது, அதனுடன் சேர்ந்த நேச நாடுகளோ, அதிகக் கவனஞ் செலுத்தியதாகக் காணோம். முதல் எதிரி ஹிட்லர்; ஹிட்லரை முறியடித்தால், எல்லா எதிரி தேசங்களையும் முறியடித்தது போலவேயாகும் என்று ரூஸ்வெல்ட் சொன்னார். பிரிட்டிஷார்கூட அப்படித்தான் நினைக்கிறார்கள். ஆனால், அது தவறு என்று ஆஸ்திரேலியா சொல்லுகிறது; சீனாவும் சொல்லுகிறது. ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம் வேறு; பாஸிபிக்கில் நடக்கும் யுத்தம் வேறு; ஐரோப்பாவில் ஹிட்லரை முறியடித்து விடுவதால், கிழக்கே ஜப்பானியரை முறியடித்தது போலாகாது. பாஸிபிக்கில் ஜப்பான் வெற்றி பெற்று, அங்கு அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டி விடுமேயானால், அப்புறம் ஜப்பானை இலகுவில் அசைக்க முடியாது. இன்று ஹிட்லரை மட்டும் எதிர்க்க வேண்டுமென்று சொன்னால், நாளைக்கு ஜப்பான் வெற்றி பெற்றுவிட்டால், ஹிட்லரையும், ஜப்பானையும் நேச நாடுகள் எப்படி எதிர்த்து நிற்க முடியும்? அது இன்னமும் சங்கடமாக வந்து முடியுமல்லவா? இதைப் பிரிட்டிஷாரோ, அமெரிக்கரோ இன்னமும் சரியாகச் சிந்தித்துப் பார்க்கவில்லை.

ஃ ஃ ஃ

அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா, சீனா முதலிய நேச நாடுகள் தனித்தனி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதால், ஜப்பானை எதிர்த்து முறியடித்துவிட முடியாது; கூட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வித கூட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவிடாமல் தடுப்பதற்கே ஜப்பான் தந்திரமாகப் போராட்டத்தை நடத்தி வருகிறது. பாஸிபிக்கிலுள்ள சகல தீவுகளையும், மலேயா, சிங்கப்பூர், பர்மா, ரங்கூன் முதலிய இடங்களை ஜெயித்துச் சீனாவுக்குப் போகும் பர்மா ரோடையும் ஜப்பான் கைப்பற்றிக் கொண்டால், சீனாவின் கதி என்னவாகும்? சீனாவில் ஒரு பிரதேசமும் ஜப்பானுக்கு வேண்டியதில்லை; சீனாவுக்குப் பூர்ண சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லி, சீனாவுடன், ஜப்பான் ஒரு சமரசம் செய்துகொள்ளுகிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால், பிரிட்டன், ரஷியா, அமெரிக்க நாடுகளின் கதி என்னவாகும்? அச்சு நாடுகளுடன், எந்த நேச நாடும் தனிமையாக ஒப்பந்தஞ் செய்துகொள்வதில்லையென்று 26 நாடுகள் கைசாத்திட்டு பிரகடனஞ் செய்திருப்பது மெய்; அது ரொம்ப நல்லதுதான்; அவ்வித உறுதியும் அவசியந்தான்! ஆனால், இந்தக் காலத்தில் ஒப்பந்தம் என்ன, பிரகடனங்கள் என்ன? அவைகளுக்கு என்ன மதிப்பிருக்கிறது? அவைகளை மதிப்பது யார்? அவைகளை வெறும் குப்பைக் காகிதமாகவே மதிக்கின்றனர்! அந்த ஒப்பந்தங்களும், பிரகடனங்களும், நொடிப் பொழுதில், அதாவது, ஒப்பந்தம் எழுதிய மை உலருவதற்குள்ளேயே அவை குப்பைத் தொட்டிக்குப் போய்ச் சேருகின்றன! ஒப்பந்தங்களை மதித்த காலமும், அவற்றை மதித்து நடந்து வந்த காலமும் மலையேறிவிட்டது! இனிமேல் அதை மதிக்கப் போகிறவர் யாருமில்லை. பிரிட்டிஷார் ஆகட்டும்; வேறு யாராகட்டும்; பிரிட்டிஷார் மட்டும் என்ன அரிச்சந்திரர்களா? அவர்கள் அரிச்சந்திரர்களுமல்ல, அரிச்சந்திரனுக்கு அடுத்த வீட்டுக்காரருமல்ல! அமெரிக்கரோ, பிரிட்டிஷாருக்கு அடுத்த வீட்டுக்காரர்தான்! அட்லாண்டிக் யுத்த லட்சியம் என்ன கதியாயிற்று? சர்ச்சில் அதற்கு என்ன வியாக்யானஞ் செய்தார்? ரூஸ்வெல்ட் ஏன் "மம்மி" மாதிரி இன்னமும் மௌனம் சாதிக்கிறார்? அந்த லட்சியம் எல்லா நாடுகளுக்கும் செல்லுமென அவர் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருப்பதால் பயன் என்ன?

ஃ ஃ ஃ

பிரான்ஸ்மீது ஜெர்மனி படையெடுத்து வருமுன், பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் ஒரு ஒப்பந்தமிருந்தது; தனிமையாக ஜெர்மனியுடன் பிரான்ஸ் ஒப்பந்தஞ் செய்துகொள்ளக்கூடாது என்பதே அந்த ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் என்னவாயிற்று? ஆகவே, சீனா, ஜப்பானுடன் ஒரு ஒப்பந்தஞ் செய்து கொள்ளாது என்று எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்? சீனாவுக்குக் கடுமையான ஆபத்து வந்தால், சீனா என்ன செய்யும்? சீனாவையும், சீன மக்களையும் பாதுகாக்க சீனா ஒப்பந்தஞ் செய்யாமல், நேச நாடுகளின் வெறும் வாய் வேதாந்த ஒப்பந்தத்தை நம்பிச் சும்மா இருக்க முடியுமா? முடியாது. ஆகவே, நேச நாடுகள், சீனாவுக்குப் போதிய உதவிச் செய்ய வேண்டும்; உதவிச் செய்வதிலும் பேரம் வேண்டாம்; நாளையென்று காலங்கடத்திக் கொண்டு போவதும் கூடாது. நாளைக்கு என்ன நடக்குமோ நமக்குத் தெரியாது. உடனே உதவிக்கு வர வேண்டும். உதவி மட்டும் வந்தால் போதாது; பாஸிபிக்கில் நேசநாடுகள் ஒன்று சேர்ந்து தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டாலொழிய, ஜப்பானை நசுக்க முடியாது.

ஃ ஃ ஃ

ஜப்பான் பாஸிபிக்கில் வரும் வேகத்தைக் கண்டு ஆஸ்திரேலியா நடுங்குகிறது. அது அஞ்சுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. பாஸிபிக்கிலுள்ள டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன் தீவுகள் முதலியவைகளைக் கைப்பற்றியதும், ஜப்பான் ஆஸ்திரேலியாமீது பாய்ந்தே தீரும். அதற்கான ஆரம்பச் சடங்குகளைக்கூட அது ஆரம்பித்து விட்டது! ஆஸ்திரேலியாவுக்குச் சமீபத்திலுள்ள பிஸ்மார்க், ராபால் தீவுகள் மீதும், நியூகினியா தீவின் வடகரையோரத்தின் பல இடங்களிலும் ஜப்பான் விமானங்கள் வெடிகுண்டுகளை எறிந்து, பல கப்பல்களை மூழ்கடித்தன. அங்கு ஜப்பான் ராணுவங்களை இறக்கக்கூடுமென்று தெரிகிறது. ஆஸ்திரேலியாவை எதிர்க்கவே இந்த நடவடிக்கை. மேலே கூறிய தீவுகளுக்கு வட கிழக்கேயுள்ள ஸலாமூமா, புலோலோ, மடங்க் முதலிய தீவுகளையும் தாக்க, ஜப்பான் விமானம் தாங்கிக் கப்பலொன்றில் சுமார் 100 விமானங்களை ஏற்றிக் கொண்டு வந்தனர். இவற்றில் 50 வெடி விமானங்கள்; மற்றவை போர் விமானங்கள். இந்தத் தீவுகள் ஆஸ்திரேலியாவுக்கு அதிகத் தூரத்திலில்லை. இந்தத் தீவுகளைத் தாக்கிய ஜப்பான் விமானங்கள், ஆஸ்திரேலியாவை ஏன் தாக்க முடியாது? பிலிப்பைன், மலேயா, பர்மா முதலிய இடங்களில் ஜப்பான் படைகளைக் கொண்டுபோய் இறக்கியதுபோல், ஆஸ்திரேலியாவிலும் படைகளை இறக்க வழி தேடுகின்றனர். ஜப்பான் யுத்தக் கப்பல்கள் ஆஸ்திரேலியாவைத் தாக்குவதற்கு இடமிருக்கிறது. ஜப்பான் கப்பல்களை மடக்கப் பாஸிபிக்கில் பிரிட்டிஷ், அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அதிகமாக இல்லை. அமெரிக்கக் கப்பல்கள் பிலிப்பைன், ஹாவாய், ஹானலூலு, பெர்ல் துறைமுகம் போன்ற அமெ

(அடுத்த பக்கம் பார்க்க)

(மனோரதம்) (முன் பக்கத்தொடர்ச்சி)

# அரிச்சந்திரனுக்கு அடுத்த வீட்டுக்காரரா?

## "மம்மி" மாதரி மௌனமேன்?

## என் கைக்கு 144!

## ஆண்டாண்டு அழுது புரண்டாலும்! மாண்டார் வருவரோ?

## சாகப் போகும் பிணம்!

ரிக்கத் தீவுகளைக் காப்பாற்றுவதிலும்' ஜப்பான் யுத்தக் கப்பல்களையும், சப்மரெய்ன்களையும் எதிர்ப்பதிலும் தீவிரமாக இருக்கின்றன. அந்த எல்லையைத் தாண்டி, தெற்கேயோ, அல்லது மேற்கிலோ வருவதற்கோ, அமெரிக்கக் கப்பல்களுக்கு வசதி இல்லை. பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களோ, மலாய், பர்மா, விசேஷமாகச் சிங்கப்பூர் முதலிய இடங்களைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. அவை திடீரென ஆஸ்திரேலியாவுக்கு உதவிக்குப் போக முடியுமா என்பது சந்தேகமே. இந்தச் சங்கடமான நிலைமையை அறிந்துதான், அமெரிக்காவின் உதவியை நாடி, ஆஸ்திரேலியா நேரடியாக அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

ஃ ஃ ஃ

பிலிப்பைன் தீவில் இன்னமும் கடுமையான போராட்டம் நடந்து வருகிறது; அங்குள்ள அமெரிக்க, ஜப்பான் யுத்தக் கப்பல்களும், விமானங்களும் தீவிரமாகப் போராடி வருகின்றன. பிலிப்பைனில் ஜப்பானியர் கையே ஓங்கி இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஹாங்காங் ஜப்பானியர் கைவசமாகிவிட்டதால், பிலிப்பைன் தீவுகளை எதிர்க்க ஜப்பானுக்குச் சுலபமாகிவிட்டது. ஹாங்காங்கிலுள்ள பல லக்ஷக்கணக்கான சீனர்களை ஜப்பானியர் வெளியேற்றி வருகின்றனர். அடுத்தது, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள். பல சிறு தீவுகளை ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர். சுமத்ரா, போர்னியோ, ஜாவா முதலிய தீவுகளை ஜப்பான் விமானங்கள் அடிக்கடி தாக்கி வெடி குண்டுகளை எறிந்து வருகின்றன. இந்தப் பெரிய தீவுகள் மலேயாவுக்கு • தெற்கிலும், தென் கிழக்கிலும், மேற்கிலுமாகச் சிங்கப்பூரைச் சுற்றியிருப்பது கவனிக்கத் தக்கது. அந்தத் தீவுகளை ஜப்பான் எப்படியும் கைப்பற்றவே முயற்சிக்கும்; அந்தத் தீவுகளைத் தாக்கி, சிங்கப்பூரை முற்றுகை போட வேண்டுமென்பதே ஜப்பானியர் நோக்கம். அந்தத் தீவுகள் ஜப்பானியர் கைக்குப்போய் விடக்கூடுமென்று பயந்தே, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் கவர்னர் அமெரிக்காவுக்குப் பறந்து போயிருக்கிறார். அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டைக் கண்டு பேசி, பல முக்கியமான ரகசியங்களைக் கொடுத்திருக்கிறார். பாஸிபிக்கில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா முதலிய நேச நாடுகள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டாலொழிய, பாஸிபிக்கிலுள்ள அமெரிக்கத் தீவுகளையோ, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளையோ, அல்லது பிரிட்டிஷ் பிரதேசங்களையோ பாதுகாக்க முடியாது. ஜப்பான் கைப்பற்றியிருக்கும் தீவுகளையும் மீண்டும் பெற முடியாது. அந்தத் தீவுகளை மீண்டும் கைப்பற்றுமலிருக்கவே, ஜப்பான் பல ஆயிரக்கணக்கான மைல் தூரமுள்ள சிறு தீவுகளையெல்லாம் எதிர்த்து, அங்குள்ள நேச தேசத்தினர் கடற்படைத் தளங்களைப் பாழாக்கி வருகிறது. பர்மா, மலேயா யுத்தம் இன்று ஆஸ்திரேலியா வரை எட்டிவிட்டது.

ஃ ஃ ஃ

மலேயா அநேகமாக ஜப்பானியர் வசமாகி விட்டது; சிங்கப்பூர் ஒன்று தான் பாக்கி; சிங்கப்பூருக்குச் சுமார் 50, 60 மைல் தூரத்தில் ஜப்பானியர் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்கள் 20, அல்லது, 30 மைல் தூரத்திலேயே இருக்கக்கூடுமென்பது வேறு சிலர் யூகம். தினசரி 50 60 ஜப்பான் விமானங்கள் சிங்கப்பூரைக் கடுமையாகத் தாக்கி வருகின்றன. ஒரேயடியாக 90 வெடிகுண்டு விமானங்கள்கூட சிங்கப்பூரைத் தாக்கியதுமுண்டு. சிங்கப்பூரிலுள்ள பிரிட்டிஷ் விமானப் படைகள், ஜப்பான் விமானங்களை எதிர்த்துப் போராடி வருகின்றன. சிங்கப்பூருக்கு சேதமுண்டு; என்றாலும், பிரிட்டிஷ் படைகள் பணிந்து விடவில்லை; தைரியமாகப் போராடியே வருகின்றன. மலேயாவில் அவை கடைசி மட்டும் போராடியே தீரும். ஏனெனில், சிங்கப்பூர் பிரிட்டிஷாரின் உயிர் நாடி. கிழக்கே, அதாவது பாஸிபிக்கிலும், இந்து மகா சமுத்திரத்திலும் பிரிட்டிஷ் கடற்படைக்கு முக்கிய தளம் சிங்கப்பூர். ஜப்பான் கடற்படைக்கு முட்டுக்கட்டை போட்டிருந்தது சிங்கப்பூர். சூரியனே அஸ்தமித்து அறியாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்கப் பிரிட்டிஷ் கடற்படைகளுக்கும் ராணுவங்களுக்கும் மத்திய தளமாக இருப்பது சிங்கப்பூர். ஆகவே, சிங்கப்பூரைக் காப்பாற்றப் பிரிட்டிஷார் கடைசிவரையில், கடைசிக் கப்பல், விமானம், கடைசி பிரிட்டிஷ் அல்லது, இந்திய சோல்ஜர் இருக்கும் வரையில் போராடியே தீருவார்கள்; அதில் சந்தேகமில்லை. அதேபோல், ஜப்பானியரும், கடைசி வரையில் சிங்கப்பூருக்காக போராடித்தான் தீருவார்கள். ஏனெனில், ஜப்பானியர் குறி சிங்கப்பூரில்தான். ஜப்பான் கடற்படை கிழக்கே பரவாமல் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்துக் கொண்டிருந்தது சிங்கப்பூர். சிங்கப்பூரைக் கைப்பற்றும் வரையில், அங்குள்ள பிரிட்டிஷ் கடற்படைத் தளத்தைச் சிதறடிக்கும்வரையில் ஜப்பானியர் கண்ணடைக்கப் போவதில்லை! ஆகவே, சிங்கப்பூர் போராட்டம் கடுமையாகவே இருக்கும்; சிங்கப்பூரிலிருந்து அதிகச் செய்திகள் வருவதில்லை. உண்மையான செய்தி கிடைத்தால் நிலைமையை நன்கு அறிந்து கொள்ளலாம்; நாமே உண்மை நிலைமையை யூகித்துக் கொள்ளவும் முடியும். ஆனால், இந்த நிலைமையில் ஒன்றும் சொல்லுவதற்கில்லை; எழுதுவதற்கில்லை! ஆகவே, என் கைக்கு நானே 144 போட்டுத் தடை செய்து வைத்திருக்கிறேன்! ஏன்? 'யுத்த காலம்!

ஃ ஃ ஃ

சிங்கப்பூரை வளைத்துக்கொள்ளுவதற்கு, அதாவது முற்றுகை போடுவதற்கு ஜப்பானியர் எவ்வளவு தந்திரமாகப் போராட்டத்தை நடத்தி வருகிறார்களென்பதைக் கவனிக்கவேண்டும். மலேயாவின் கிழக்கிலோ, அல்லது கிழக்குக் கடற்கரை ஓரத்திலோ அவர்கள் அதிகமாகக் கவனஞ் செலுத்தவில்லை; மேற்குக் கடற்கரை ஓரத்தில்தான் அதிகக் கவனஞ் செலுத்தி, அங்கிருந்து சிங்கப்பூரை நோக்கி முன்னேறி வருகின்றனர். சிங்கப்பூரைச் சுற்றி லுமுள்ள சுமத்ரா, போர்னியோ தீவுகளைத் தாக்கி வருகின்றனர். அங்கிருந்து மலேயாவுக்கு உதவி வராமல் தடுக்கவே இந்தத் தந்திரம்; இவ்வாறு நாலா பக்கமும் பிரிட்டிஷ் படைகளின் உதவி வராமல் தடுத்து, சிங்கப்பூரை முற்றுகை போட முயற்சிக்கின்றனர். மலேயாவில் ஜப்பான் படைகளோ, புற்று ஈசல்களைப் போல் குவிந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எதிர்த்து நிற்க முடியாமல் பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, இந்தியப் படைகள் ஜோஹோர் தெற்கு எல்லை வரையில் அதாவது, பாடு பஹாத் வரையில் வெகு சாமர்த்தியமாகப் பின்வாங்கி வந்திருக்கின்றன! இனிமேலும் பின்வாங்குவதாக இருந்தால், சிங்கப்பூர் தீவுக்குப் போய்ச் சேரவேண்டியது தான். இன்றேல், அங்கிருந்தும் கடைசியில் வெளியேறி, சுமத்ரா, போர்னியோ, தீவுகளுக்குப் போய்ச் சேரவேண்டியதுதான்! அந்தத் தீவுகளிலும் ஜப்பான் தாக்குதல் இருந்து கொண்டே இருக்கிறது. அந்தத் தீவுகளுக்குப் பின் வாங்கிப் போவதாக இருந்தால் கூட, அதுவும் ஆபத்தில் தான் வந்து முடியும்!

ஃ ஃ ஃ

அடுத்த போர் அரங்கம் பர்மா; பர்மாவின் கீழ் பாகம், அதாவது தெற்குப் பர்மா, அநுமார் வால் போல் நீண்டு, தாய்லாந்து எல்லையுடன் சேர்ந்திருக்கிறது. ஆகவே, தாய்லாந்து எல்லைவழியாய் ஜப்பான் ராணுவங்கள் மடமடவென்று பர்மாவின் தெற்குப் பகுதியில் இறங்கி விட்டன. ஒரு பகுதி மலேயாவுக்குள் இறங்கி, சிங்கப்பூரை நோக்கித் தெற்கே போய்க்கொண்டிருக்கிறது. மற்றொரு பகுதி, பர்மாவின் வடக்கு நோக்கி முன்னேறி வருகிறது. வடக்கில் ரங்கூன்மீது கண். ஆகவே, ஜப்பான் விமானங்கள் ரங்கூனைப் பலமாகத் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. அங்கு சுமார் 600, 700 பேர் மாண்டனரென்று ஆதியில் செய்தி வந்தது; இப்பொழுது அது ஆயிரக் கணக்கில், விஷம் ஏறுவதுபோல் ஏறிக்கொண்டே போகிறது! எத்தனை ஆயிரக் கணக்கில் மாண்டாலென்ன? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? அவர்கள் காலம் முடிந்தது; அவர்கள் வீர சுவர்க்கம் புகுந்திருக்கலாம்; அங்கிருந்துகொண்டு பர்மா, மலேயா யுத்தத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கலாம்! செத்த பிணத்தைச் சாகப் போகும் பிணம் கட்டியழுவது போல், இன்னம் வீரசுவர்க்கம் போகவிருக்கும் மக்களை அவர்கள் கணக்குப் போட்டு எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம்!

ஃ ஃ ஃ

அது எப்படியோ போகட்டும்; ரங்கூனைக் குறிவைத்த ஜப்பானியர், முதலில் டேனஸெரிம் என்ற பர்மாவின் தென் கோடி முனையைத் தாக்கினர். வெடி குண்டுகளை எறிந்தனர்; அப்புறம் விக்டோரியா துறைமுகத்தைத் தாக்கினர். பிரிட்டிஷ் துருப்புகள் பத்திரமாகப் பின் வாங்கின; உடனே மௌல்மீனில் ஜப்பானியர் திருவிளையாடல் ஆரம்பமாயிற்று; ரங்கூனையும் விட்டு வைக்கவில்லை. இதற்கிடையில் டாவாய் என்னும் ஒரு முக்கியமான துறைமுகத்தை ஜப்பானியர் கைப்பற்றினர். இது அந்தமான் தீவுக்கு நேர் கிழக்கே இருக்கிறது. டாவாய் சிறு துறைமுகந்தான். ஆனால், ரொம்ப முக்கியமான துறைமுகம்; ரங்கூனுக்கும், மலேயாவிலுள்ள துறைமுகங்களுக்கும் கடல் மார்க்கமாகப் போகும் கப்பல்களெல்லாம், இந்த வழியாகத்தான் போகவேண்டும். அவ்வளவுக்கு முக்கியமான துறைமுகம். இன்று ஜப்பானியர் கையில் இருக்கிறது; இது பர்மாவின் தென் கோடியிலிருந்து சுமார் 300 மைல் தூரத்தில் வடக்கே இருக்கிறது. இவ்வளவு தூரம் ஜப்பானியர் முன்னேறி வந்து பிடித்துக் கொள்ளவில்லை. ஆனால், ஜப்பான் துருப்புகளும், தாய்லந்து துருப்புக

(14-ம் பக்கம் பார்க்க)

# சங்கநாதம்

## முடவன் ஆசை!

## எட்டாத பழத்துக்குக் கொட்டாவி!

## மந்திரக் கோல் மாயம்!

## கர்மம் தொலைந்ததா?

## எந்த "மோஸ்தரில்" வரும்?

## அழுத பிள்ளைக்கு வாழைப் பழம்!

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதும், எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுவதும் ஒன்றுதான்! காங்கிரஸ் காரியக் கமிட்டி பர்தோலியில் செய்த தீர்மானத்தைக் கண்டு, பலர் கொட்டாவி விட்டனர்! காங்கிரஸில் பிளவு ஏற்படாதா, காந்திஜி காங்கிரஸிலிருந்து விலகிவிடமாட்டாரா என்று எதிர்பார்த்தவர் பலர்; ஏங்கினவர் அநேகர்! குலதேவதைக்குப் பிரார்த்தனை செய்து கொண்டவர் எண்ணிறந்தோர்! இந்தியாவிலும், பிரிட்டனிலுமுள்ள அதிகார வர்க்கத்தினர் கூட எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினர்! காங்கிரஸில் பிளவு ஏற்பட்டால், இத்துடன் சனியன் ஒழிந்ததுயென்று தலை முழுகிவிட நினைத்தார்கள்! இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் முட்டுக்கட்டையையும், காங்கிரஸ் சுதந்திர கோரிக்கையையும் இத்துடன் மூட்டை கட்டி மூலையில் போட்டுவிடலாமென்று யோசனை போட்டார்கள்! இதற்கிடையில், பர்தோலி தீர்மானத்தைப்பற்றி என்னமெல்லாமோ ஜோசியங்கள் கிளம்பின! வார்தாவில் என்ன நடக்குமோ, காங்கிரஸ் சீர்குலைந்து விடுமோ என்று பயந்தவர்களுமுண்டு! ஆனால், காந்திஜியின் மந்திரக்கோல் மாயத்தை, யாரும் அறிந்துகொள்ளவில்லை! வார்தாவில் பர்தோலி தீர்மானம் நிறைவேறுமா என்று பலர் சந்தேகப்பட்டனர். சந்தேகமெல்லாம் தெளிந்துவிட்டது. காங்கிரஸ் சீர்குலைந்து விடுமென்று எதிர்பார்த்தவர்கள் எல்லோரும் ஏமாந்தனர்! காந்திஜியின் மாய சக்தி வெற்றி பெற்றது. வார்தாவில் பர்தோலி தீர்மானம் நிறைவேறியது; வார்தாவில் தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்னிருந்த சர்ச்சைகள் எல்லாம் ஒழிந்தன! பர்தோலி தீர்மானத்தைப்பற்றிப் பேச்சு மூச்சையே காணோம்! காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும், பர்தோலி தீர்மானத்தை ஆதரித்தவர்களும் சரி, ஆதரிக்காதவர்களும் சரி, எல்லோரும் அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறுகிறார்களில்லை. சர்க்கார் சமரசத்துக்கு வந்தாலுஞ் சரி, வராமற் போனாலுஞ் சரி. அதைப்பற்றிக்கூட எந்தக் காங்கிரஸ் தலைவரும் லட்சியஞ் செய்யவில்லை! எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இந்தியாவின் சுதந்திர கோரிக்கையை இன்னமும் நன்றாக உருவாக்கும் ஒரு விஷயத்தில்தான் கவனம் செலுத்துகின்றனர்.

* * * *

சட்ட சபைகளைக் கைப்பற்றலாமா, பதவியில் போய்க் குந்திக்கொள்ளலாமா என்ற பேச்சுக்குக்கூட இடமில்லை; அதைப்பற்றிய சிந்தனையுமில்லை! அவ்வளவுக்குக் காங்கிரஸ் தலைவர்களிடையே ஒரு அற்புதமான ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது! இந்த அற்புதத்துக்குக் காரணம் யார்? காந்திஜிதான். அவருடைய அற்புத மந்திரக் கோல், இந்தப் புதுமை செய்திருக்கிறது! வார்தாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, பர்தோலி தீர்மானத்தை ஆதரித்தது; அத்துடன் அதன் கடமை தீர்ந்தது. இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்கவும், இந்தியரின் அபிலாஷை என்னவென்பதை உலகிற்கு அறிவிக்கவும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அதன் கடமையைச் செய்து முடித்தது. இனிமேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது சர்க்கார்; சர்க்கார்மீதே சகல பொறுப்பும் விழுந்திருக்கிறது. சர்க்கார் வழிக்குவருவார்களா என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். ஆனால், டில்லியிலும், லண்டனிலும் பரபரப்பு ஏற்படாமலில்லை. லண்டனுக்கும், டில்லிக்கும் அடிக்கடி பேச்சு வார்த்தைகள் நடந்து வருகிறது. வைஸிராய் பிரயாத்திரை முடிந்தது; அவர் டில்லி வந்து சேர்ந்துவிட்டார். ஆனால், அவர் தேக நிலை சரியாக இல்லை; ஜலதோஷம் காரணமாகக் கொஞ்சம் ஓய்வு எடுத்து வருகிறார். என்றாலும், லண்டன் பேச்சை நிறுத்தவில்லை; இதற்கிடையில், டில்லியில் தலைவர்கள் வருவதும், போவதும், வைஸிராயைக் கண்டு பேசுவதும் குறையவில்லை. டில்லி வழக்கம் போல் சுறு சுறுப்பாகத்தானிருக்கிறது!

* * * *

அமெரிக்கா சென்றிருந்த பிரிட்டிஷ் முதன் மந்திரி சர்ச்சிலும், பத்திரமாக லண்டன் வந்து சேர்ந்துவிட்டார். இந்தியா விஷயத்தில் சர்ச்சில் எப்பேர்ப்பட்ட எண்ணமுடையவரென்பது இந்தியாவிலுள்ள சிறு குழந்தைக்குக் கூடத் தெரியும்! அப்பேர்ப்பட்டவர் அமெரிக்காவுக்குப் போய்விட்டு எப்படித் திரும்பி வந்திருக்கிறாரோ தெரியவில்லை. காசிக்குப் போயும் கர்மந் தீரவில்லையென்ற நிலைமையில் வந்திருக்கிறாரா, அல்லது, பழைய குருட்டுக் கொள்கைகளையெல்லாம் தலைமுழுகிவிட்டு வந்திருக்கிறாரா என்பதும் இனிமேல்தான் தெரியும். அவர் இந்தியாவைப்பற்றி என்ன பேசப் போகிறார் என்பதிலிருந்தே, அதை தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. சர்ச்சிலும் சீக்கிரத்தில் இந்தியாவைப் பற்றிப் பேசப் போவதாக அவரே பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அறிவித்திருக்கிறார். ஆனால், அவர் என்ன பேசப்போகிறார் என்பதைப்பற்றியே பல வதந்திகள் உலாவுகின்றன. காங்கிரஸ் தீர்மானம் என்னவென்று சர்ச்சிலுக்குத் தெரியும்; அவர் அமெரிக்காவிலிருந்தபோது, ரூஸ்வெல்ட் கூடக் காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றியும், இந்தியரின் சுதந்திர கோரிக்கைகளைப்பற்றியும், சர்ச்சிலுக்கு இடித்துக் கூறியதாகக் கேள்வி. அதே சமயத்தில், இந்தியாவிலுள்ள மிதவாத மணிகள், சர். சாப்ருவின் தலைமையில் சர்ச்சிலுக்குச் சில கோரிக்கைகளை அனுப்பிவைத்தனர்; அவர் வாஷிங்டனிலிருந்து புறப்படும் சமயத்தில்தான் அந்தக் கோரிக்கைகள் சர்ச்சில் கைக்கு வந்தனவாம்! சர்ச்சில் பறந்து வரும்போதே அந்த அறிக்கையைப் பார்த்திருக்கலாம்; ஆனால், பறந்து வந்தபோதே, மிதவாதிகள் கோரிக்கைகள் காற்றுவாக்கில் பறந்துவிட்டனவோ, அல்லது சர்ச்சில் அந்தக் கோரிக்கைகளைக் கவனமாகப் படித்து, அவர் மூளையின் ஒரு பக்கத்தில் பத்திரமாக ஒதுக்கி வைத்திருக்கிறாரோ என்னமோ சொல்லமுடியாது! சர்ச்சில் அறிக்கை வெளிவந்தால், இந்த உண்மை தெரியும்!

* * * *

சர்ச்சில் அறிக்கை எந்த "மோஸ்தரில்" வெளிவரக்கூடுமென்று இப்பொழுதே சில வதந்திகள் வந்திருக்கின்றன. அவர் அறிக்கை அநேகமாக மிதவாதிகள் கோரிக்கைகளை ஒத்ததாக இருக்குமாம்! காங்கிரஸ் தீர்மானத்தைப்பற்றி சர்ச்சில் ஒரு வார்த்தைகூடக் கூறப்போவதில்லையாம்! மிதவாதிகள் கோரிக்கைகள்கூட முழுவதும் அமுலுக்கு வராதாம்! அழுகிற பிள்ளைக்கு வாழைப் பழத்தைக் காட்டுவது போல், சர்ச்சில் அங்கு மிங்கும் சில மாறுதல்கள் செய்யலாம்! வைஸிராய் நிர்வாக சபையில் இன்னம் சில இந்தியர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடும். அவர்களுக்கு உள்நாட்டு நிர்வாகம் போன்ற சில பொறுப்புகளைக் கொடுக்கலாம். ஆனால் ராணுவம், தற்காப்பு, நிதி முதலிய நிர்வாகப் பொறுப்பை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்; அது வெள்ளை மெம்பர்கள் அதிகாரத்தில்தானிருக்கும். மாகாணங்களில் கவர்னர்களே சர்வாதிகாரிகளாக இருக்கின்றனர்; அவர்கள் ஆலோசனையாளர்கள் குட்டிச் சர்வாதிகாரராக இருப்பது தெரிந்த விஷயம்! அந்த குட்டிச் சர்வாதிகாரிகளுக்குப் பதிலாக, உத்தியோகப் பற்றற்ற இந்தியரைக் கவர்னர்கள் ஆலோசனையாளர்களாக நியமிக்கலாமென்று மிதவாத சிகாமணிகள் சர்ச்சிலுக்கு ஒரு யோசனை கூறியிருந்தனர்! இந்த யோசனையைப் பற்றிச் சர்ச்சில் கவனித்து வருகிறாராம்! ஆனால், அவர் மூளைக்கு அது பிடிக்கவில்லை; அது சாத்யமில்லை என்பதைச் சர்ச்சிலே தெரிந்து கொண்டாராம்! மிதவாதிகள் கூறிய இந்த யோசனை

(அடுத்த பக்கம் பார்க்க)



வார்தாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காந்திஜி, ராஷ்ட்ரபதி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஆச்சாரியா கிருபாலினி முதலிய காங்கிரஸ் தலைவர்கள் மேடைமீது அமர்ந்திருக்கின்றனர்.

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

# வெள்ளை போய் கருப்பு!

## எந்த லட்சணத்திலிருக்கிறது?
## மருமகள் தாலியறுக்க வேண்டும்!
## ஐந்தாம் படை யார்?
## சீட்டுக் கொடுப்பார்களா?

படு மோசமானது! ஜனநாயகக் கொள்கைக்கு நேர்மாறானது. காங்கிரசுக்காரருக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட யோசனை. மாகாணங்களில் இன்று இருந்து வரும் வெள்ளைச் சர்வாதிகாரிகள் போய், கருப்புச் சர்வாதிகாரிகள் வருவார்கள்! யார் வந்தால் என்ன? தலைக்கு மேல் தண்ணீர் ஜான் ஓடினாலென்ன, முழம் ஓடினாலென்ன? எல்லாம் ஒன்றுதான்! ஆனால், இவ்வித மாறுதலை எந்த இந்தியரும் ஒப்புக்கொள்ள மாட்டார்களென்பது நிச்சயம். ஆகவே, இந்த யோசனையைச் சர்ச்சில் தள்ளிவிட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை! ஆனால், அவர் அங்குமிங்கும் நுனிப்புல்லை மேய்ந்து, இந்திய அரசியல் நெருக்கடியை முன்போல் வைத்துக் கொண்டிருப்பதிலேயே ரொம்ப அக்கரை கொண்டிருப்பதாகத் தெரிகிறது! இதனால், யாருக்கும் லாபமில்லை; பிரிட்டனுக்கும் லாபமில்லை; இந்தியாவுக்கும் லாபமில்லை! சர்ச்சில் மனோபாவம், அவர் பேச்சிலிருந்தே வெளியாகிவிட்டது!

* * * *

இந்தியாவின் வாசலில் யுத்தம் குமுறிக் கொண்டிருக்கும்போது, இந்தியர் சுதந்திரம் கேட்கிறார்கள்; இந்தச் சமயத்திலா இந்தியர் சுதந்திரத்தைப்பற்றிப் பேசுவது என்று சர்ச்சில் பார்லிமெண்டில் சொன்னார். சர்ச்சில் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார்! இந்தியர், இன்று நேற்று சுதந்திரம் கேட்கவில்லை; பல வருடங்களாகச் சுதந்திரம் கேட்டுவருகிறார்கள். இந்தியாவின் லட்சியம் பூர்ண சுதந்திரமே யென்று காங்கிரஸ் பல வருடங்களுக்கு முன் தீர்மானித்திருக்கிறது. வருடந்தோறும் அந்த லட்சியத்தை வற்புறுத்தி வந்திருக்கிறது. இந்த யுத்தம் போலந்து எல்லை எட்டியதுமே, இந்தியர் சுதந்திரம் கேட்டார்கள். யுத்தத்தில் ஒத்துழைக்க இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுது பிரிட்டிஷ் மந்திரிகளும், ராஜ தந்திரிகளும் என்ன சொன்னார்கள். நெருக்கடியான யுத்த சமயத்திலா இந்தியர் சுதந்திரம் கேட்பது? அதைப்பற்றிச் சிந்திக்கக்கூட நேரமில்லையே என்றார்கள். அவ்வளவு வேகத்தில் பிரிட்டிஷ் மந்திரிகள் யுத்தத்துக்காக ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகக் காட்டிக் கொண்டார்கள். ஆனால், யுத்த ஏற்பாடு எந்த லட்சணத்தில் இருக்கிறது. இன்னமும் இருந்து கொண்டிருக்கிறதென்பதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை!

முதற் கோணல், முற்றும் கோணலாகத்தானிருக்கிறது! என்றாலும், இந்தியருக்குச் சுதந்திரம் கொடுத்து, இந்தியரின் ஒத்துழைப்பை பெறப் பிரிட்டிஷாருக்கு மனமில்லை; கிழக்கே, பர்மாவும், மலாய் நாடும், இதர பாஸிபிக் தீவுகளும் ஆபத்தான நிலைமையிலிருந்துங்கூட, பிரிட்டிஷாருக்கு இந்தியரின் கோரிக்கைக்கு இசைந்து வர இஷ்டமில்லை மகன் செத்தாலும் பாதகமில்லை; மருமகள் தாலியறுக்கவேண்டுப் என்ற முழு மோசமான மனப்பான்மையே காட்டிவருகிறார்கள்! ஆனால், இந்த கர்பனை யாரைச் சூழ்ந்து கொள்ளப்போகிறதென்பதைப் பிரிட்டிஷ் மந்திரிகள் அறியவில்லை; சமீபத்தில் ராஜகோபலாச்சாரியார் பிரிட்டிஷாரை எச்சரித்தது போல், இந்தியாவுக்காகச் சுதந்திரம் கொடுக்காவிட்டாலும், பிரிட்டிஷார் அவர்கள் நலனை உத்தேசித்தாவது, இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தாக வேண்டும். இன்றேல், பிரிட்டனுக்குத்தான் அதிக கேடு என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளுவார்களாக.

* * * *

யுத்த ஆரம்பத்தில் இந்தியர் சுதந்திரம் கேட்டனர்; அதைத் தட்டிக் கழித்தனர். இரண்டரை வருடங்களாகத் தட்டிக் கழித்துக் கொண்டே வருகிறார்கள்! இந்திய வாசலுக்கு யுத்தம் வந்துவிட்டது; இப்பொழுதாவது சுதந்திரம் கொடுக்கக் கூடாதா என்று கேட்டால், யுத்தம் வாசலில் வந்திருக்கும்போதா சுதந்திரம் கேட்பது; இப்பொழுது சுதந்திரம் கொடுக்கச் சாத்யப்படுமா என்று சர்ச்சில் சொல்லுகிறார்! கொடுக்கக்கூடாத இடையன், சினை ஆட்டைக் காட்டுவது போலிருக்கிறது சர்ச்சில் பேச்சு இந்தியாவில் ஒற்றுமை இல்லை; பிரிவினை அதிகமாக இருக்கிறது; இந்தியர் ஒன்றுபட்டால்தான் சுதந்திரம் கொடுக்கமுடியும் என்று ஒரு நொண்டிச் சாக்குப்போக்குக் கூறியும் காலங்கடத்தி வருகிறார்கள்! இதுவும் ஆபத்தான, அறிவீனமான போக்கு என்பதைப் பிரிட்டிஷார் அறியவேண்டும். இந்தியாவில்தான் ஒற்றுமை இல்லை; பர்மாவுக்கு என்ன கேடுவந்தது? பர்மாவுக்குப் பிரிட்டிஷார் சுதந்திரம் கொடுத்தார்களா? பர்மாவுக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தால், இன்று பர்மா இந்தச் சங்கடமான நிலைமையிலிருக்குமா? அதன் தற்காப்புக்குக்கூட வழியின்றித் திண்டாட்டமான நிலைமையிலிருந்திருக்குமா? இந்தியாவில் பிரிவினை அதிகம்; ஒற்றுமை இல்லையென்று பிரிட்டிஷார் பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டு இருப்பார்களேயானால், இந்தியாவின்மீது எதிரிகள் படையெடுத்துவரப் பிரிட்டிஷாரே வழி காட்டிக் கொடுப்பது போலாகும். இந்தியரே ஐந்தாம் படை வேலை செய்வதாகச் சொல்லுவது தப்பு! பிரிட்டிஷாரே அந்த ஐந்தாப் படை வேலை செய்கிறார்களென்று சொல்லவேண்டி வரும்! அது மட்டுமல்ல; இந்தியாவில் ஒற்றுமை இல்லை; பிரிவினை அதிகம் என்று, இந்தியர் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடப் பிரிட்டிஷார் வெளி நாடுகளில் பிரசாரஞ் செய்து வருகிறார்கள்; இந்தப் பிரசாரம் டோக்கியோ, பெர்லின், ரோம் முதலிய ரேடியோக்களுக்கு நல்ல விருந்தாக இருக்கும்! பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை எள்ளி நகையாட, எதிரிகள் பிரிட்டிஷார் பிரசாரத்தையே ஆதாரமாக வைத்துக்கொள்ளுவார்கள்! ஆகவே, பிரிட்டிஷார், இந்தியாவில் ஒற்றுமை இல்லை, இந்தியர் சுதந்திரத்துக்கு லாயக்கில்லை யென்று வெளியில் சொல்லிக்கொள்ளாமலிருப்பதுதான் புத்தி! இன்றேல், யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளுவதுபோல், பிரிட்டிஷாரும் அவர்கள் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளவேண்டியதுதான்!

* * * *

கிழக்கில் ஏற்பட்டிருக்கும் யுத்த நிலைமை, பிரிட்டிஷ் மந்திரி சபையில் கூட பெரிய நெருக்கடியை உண்டு பண்ணியிருக்கிறது. சர்ச்சில் மந்திரி சபை இருப்பதா, போவதா யென்ற நிலைமைக்கு வந்துவிட்டது. அதிலும் இந்திய மந்திரி அமெரியைப் பதவியில் வைத்திருப்பதா, அல்லது, சீட்டுக் கொடுத்து அனுப்பிவிடுவதா என்பதைப்பற்றியும் தீவிரமாக ஆலோசித்து வருகிறார்களாம்! அமெரிக்கு நாலா பக்கமும் இடி பலமாக விழுந்துகொண்டிருக்கிறது! அவரை மந்திரி பதவியிலிருந்து காலி செய்துவிடப் பிரிட்டனில் பலர் தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். அப்படியானால், இந்திய மந்திரி பதவிக்கு யார் வரக்கூடும்? ரஷியாவிலிருந்து திரும்பியிருக்கும், சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸை இந்திய மந்திரி பதவியில் நியமிக்கலாம்! சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியா விஷயத்தில் தாராள மனப்பான்மைகொண்டவர்; ஆகவே, இந்திய மந்திரி என்ற ஹோதாவில் அவரை இந்தியாவுக்கு அனுப்பி, ஒரு சமரச ஏற்பாடு செய்யலாமென்ற வதந்தி இருந்து வருகிறது. மேலைக்குத் தாலி கட்டலாம் கழுத்தே சும்மா இரு என்பது போலிருக்கிறது, சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்திய மந்திரி பதவிக்கு வருவது! இந்திய மந்திரி பதவிக்கு வந்தபின் சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் போக்கு எப்படி மாறுமோ யார் கண்டது? தொழிற் கட்சியினர் அதிகாரத்துக்கு வந்தபோது இந்தியா விஷயத்தில் எப்படி நடந்து கொண்டனரென்ற அனுபவத்தை இந்தியர் மறந்துவிடவில்லை! உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு என்ற நிலைமையில், தொழிற் கட்சியினர் இந்தியா விஷயத்தில் நடந்துகொண்டனர்! ஆகவே, யார் இந்திய மந்திரியாக வந்தாலுஞ் சரி, இந்தியர் சுதந்திரம் இந்தியர் கையில்தானிருக்கிறது; பிரிட்டிஷ் மந்திரிகள் கையில் இல்லை. ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன? பல்லக்குச் சுமக்கிறவன் சுமந்துதான் தீரவேண்டும்! பிரிட்டனில் யார் ஆதிக்கத்துக்கு வந்தாலுஞ் சரி; இந்தியருக்காக, இந்தியர் சுதந்திரத்துக்காக அவர்கள் சுண்டு விரலைக்கூட அசைக்கப்போவதில்லை. இந்தியர் அடிமைத்தனத்தைக் கண்டு எவரும் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கப் போவதில்லை! இந்தியருக்காக துளிகூட அனுதாபம் காட்டப்போவதுமில்லை! இது நிச்சயம்!

* * * *

இதை நன்குணர்ந்தே காந்திஜியும், காங்கிரஸ் தலைவர்களும், பிரிட்டிஷாரிடம் கெஞ்சும் மனப்பான்மையை

(அடுத்த பக்கம் பார்க்க)



பண்டித ஜவார்லால் நேரு, ராஜகோபாலாச்சாரியார், புலாபாய் தேசாய் முதலிய இதர தலைவர்கள், மேடையின் மற்றொரு பக்கத்தில் அமர்ந்திருக்கின்றனர்.

விட்டொழித்தனர்! இந்தியா அதன் சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்துச் சொந்த முயற்சியால் சுதந்திரமடைய வேண்டும்; பிறரிடம் கெஞ்சி, சுதந்திரப் பிச்சையடைவதிலும், அந்த சுதந்திரம் பெருமலிருப்பதே மேல் என்ற திடசித்தம் கொண்டிருக்கிறார்கள். இதையே காந்திஜி, ஜவார்லால் போன்ற தலைவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். காந்திஜி காசியில்கூட இதையே வற்புறுத்தி பேசியிருக்கிறார். வார்தாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் காந்திஜி, பண்டித ஜவார்லால், கோவிந்த வல்லபபந்த் முதலிய பல காங்கிரஸ் தலைவர்கள், பண்டித மாளவ்யாவின் வேண்டுகோளுக்கிணங்கி, காசி ஹிந்து சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்றனர். அதே விழா, காசி ஹிந்து சர்வ கலாசாலையின் வெள்ளி விழாவுமாகும். சுமார் 25 வருடங்களுக்குமுன், அதாவது 1916-ம் வருடம் பிப்ரவரி மாதம் காசி ஹிந்து சர்வ கலாசாலை ஆரம்ப விழாவுக்குக் காந்திஜி சென்றிருந்தார். அப்பொழுது காந்திஜி மகாத்மா அல்ல; சாதாரண காந்திதான். ஆப்ரிக்காவிலிருந்து அப்பொழுதுதான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அவரும் அந்த ஆரம்ப விழாவில் கலந்துகொண்டார். அந்த விழாவுக்கு வைசிராயும், மகாராஜாக்களும், தடபுடலாக வந்திருந்தார்கள்! மகாராஜாக்களின் ஆடை ஆபரணங்களைக் கண்டு காந்திஜி பிரமித்துப்போனார்! ஏழைகளின் தோழராகிய காந்திஜிக்கு, அவர்கள் ஆடம்பரம் பிடிக்கவில்லை; அவர்கள் ஆடம்பரத்தைக் கண்டித்துப் பேசினார். காந்திஜியின் கண்டனம் மகாராஜாக்களைத் தூக்கிவாரிப்போட்டது! அதே காந்திஜி, இன்று ஒரு மகாத்மாவாக, உலக சிரேஷ்டராக, அதே சர்வகலாசாலையின் வெள்ளி விழாவுக்கு வந்து சிறப்பித்தார்!

ஃ ஃ ஃ

இந்த வெள்ளி விழாவுக்கு வைசிராய், கவர்னர்கள் வரவில்லை; டாப்பீக ராஜாக்கள் வரவில்லை. "பாதி நிர்வாண பக்கீர்", மகாத்மாகாந்தியே காட்சியளித்தார்! காந்திஜி இப்பொழுதுகூட சும்மா இருந்தாரா? இல்லை; காசி ஹிந்து சர்வகலாசாலையின் ஆங்கில பாஷை மோகத்தைக் கண்டித்தார்! ஆங்கிலேயரைப் "பிளாட்டிங் பேப்பர்" போல் அப்படியே காப்பி அடிக்கும் அடிமைத்தனத்தை வெறுத்துப்பேசினார்! ஆங்கிலத்தில் மாணவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் தவறான முறையை விட்டொழித்து, ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது, சமஸ்கிருதம் போன்ற ஒரு சுதேசிப் பாஷை மூலம் ஏன் பாடங்கள் கற்றுக் கொடுக்கக்கூடாது என்று கேட்டார். இன்று ஐரோப்பாவிலுள்ள நாடுகளையே எதிர்த்து நிற்கும் ஜப்பானை உதாரணமாக எடுத்துக்காட்டினார். காசி ஹிந்து சர்வகலாசாலை இதுவரையில் சாதித்தது என்ன? காசிக்கும், அலிகாருக்கும் சம்பந்தமிருக்கிறதா? அதாவது, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக மாணவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டார். ஆனால், காசி ஹிந்து சர்வகலாசாலைக்காகப் பண்டித மாளவியா செய்த அரும் பெரும் தியாகங்களைப் போற்றினார். அந்நிய பாஷை மூலம் மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதைக் காந்திஜி கண்டித்தது நியாயமென்பதைப் பண்டித மாளவியா ஒப்புக் கொண்டார்! ஆங்கிலத்தை விட்டொழித்து, ஹிந்தி மூலம் பாடங்கள் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதற்கான புஸ்தகங்களை ஹிந்தியில் எழுதி வருவதாகவும் மாளவியாஜி காந்திஜியிடம் தெரிவித்தார். இது வரவேற்கத்தக்க ஒரு சிறந்த ஏற்பாடேயாகும்.

* * * *

இன்று இந்தியாவிலுள்ள கலாசாலைகள் எந்த நிலைமையிலிருக்கின்றன? தொழிற்சாலைகளில் சரக்குகளை உற்பத்தி செய்வதுபோல், சர்வகலாசாலைகள் குமஸ்தாக்களையும், டைப்பிஸ்ட்களையும் புத்தகப் பூச்சிகளையும் உற்பத்திசெய்யும் இபந்திர தொழிற்சாலைகளாக இருக்கின்றன! சர்வகலாசாலைகளிலிருந்து வெளிவரும் பட்டதாரிகள், வெறும் புத்தகப் பூச்சிகள்! அவர்களுக்கு உலகமே தெரியாது. சர்வகலாசாலையிலிருந்து வெளியில் வந்ததும், இதுதானா பூலோகம் என்று பிரமித்துப் போகிறார்கள்! அவர்கள் பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவுவதே இல்லை. இதுதான் பட்டதாரிகளின் பரிதாப நிலைமை! தற்கால கல்வி முறையும், பிற பாஷை மோகமும் இந்தியரை விட்டு ஒழிய வேண்டும்; ஆங்கில பாஷை அடிமை மோகம் ஒழிந்தாலொழிய, இந்தியரின் அரசியல் அடிமைத்தனம் ஒழியப் போவதில்லை. காந்திஜி சரியான சமயத்தில், காசி ஹிந்து சர்வகலாசாலை அதிகாரிகளை எச்சரித்தார்! இருபத்தைந்து வருடங்களுக்குமுன் அவர் சொன்ன தீர்க்க தரிசனம் நிறைவேறியது போல், இன்று கூறிய தீர்க்க தரிசனமும் நிறைவேறுமென்பதில் சந்தேகமில்லை!

* * * *

காந்திஜி காசிக்கு வந்தது அரசியல் நிலைமையிலும் ஒரு மாறுதல் ஏற்படக் காரணமாக இருந்தது. காந்திஜி பண்டித மாளவியாவுடன் இந்திய அரசில் சம்பந்தமாகச் சுமார் ஒரு மணி நேரம் கலந்து ஆலோசித்தார். காசி ஹிந்து சர்வ கலாசாலை வைபவத்துக்கு வைசிராய் நிர்வாக சபை மெம்பர், எம். எஸ். ஆனே வரவில்லை. அவர் மலேயா, பர்மா முதலிய இடங்களிலுள்ள இந்தியர் விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், பண்டித மாளவியா, ஆனேயைக் காசிக்கு வரும்படி அவசரமாக ஒரு தந்தியனுப்பினார்; ஆனேயும் உடனே புறப்பட்டு வந்தார். பண்டித கோவிந்த வல்லபபந்துடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். அதன் பின் காந்திஜியையும் கண்டு, அரசியல் சம்பந்தமாகப் பேசினார். இதனால், சர்க்காருக்கும், காங்கிரசுக்கும் ஒரு சமரசம் ஏற்பட்டுவிடும்; ஆனே அதற்காக வேலை செய்வாரென்று சொல்லிவிட முடியாது. காங்கிரசுக்கும், சர்க்காருக்கும் சமரசம் ஏற்படுவது இரண்டாம் பட்சந்தான்; சர்க்காரும், காங்கிரசும், பர்டோலி தீர்மானத்துக்குமுன் எவ்வளவு தூரத்திலிருந்தார்களோ, அதே தூரத்தில்தான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, காங்கிரசுக்கும், சர்க்காருக்கும் சமரசம் ஏற்பட்டுவிடுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஆனேக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்; வார்தா தீர்மானம் சம்பந்தமாக காங்கிரஸ் தலைவர்கள் என்ன அபிப்ராயம் கொண்டிருக்கிறார்களென்பதை ஆனே அறிந்து, வைசிராய்க்கு நன்கு விளக்கிக் கூற முடியும். காங்கிரஸ் தலைவர்களின் கருத்தை தெளிவாக அறிந்துகொள்ள இது சரியான சந்தர்ப்பமாகும். ஆனே முயற்சி பலிக்குமா, பலிக்காதா என்பதைப்பற்றி நிச்சயமாக எதுவும் கூற முடியாது. சீக்கிரத்தில் சில அற்புதங்கள் நிகழக் கூடுமென்று டில்லியிலிருந்து நம்பிக்கையான ஜோசியங்கள் வந்துகொண்டிருக்கின்றன!

* * * *

ஒரிஸா "பினாமி" மந்திரி சபை இன்னமும் பகிரங்கமாக ஆதிக்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குள்ளாகவே ஒரிஸாவில் அடக்குமுறை தலைவிரி கோலமாகத் தாண்டவமாடுகிறது! "பினாமி" மந்திரி சபையைக் கண்டிக்கும் காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்து வருகின்றனர். அந்தப் "பினாமி" மந்திரி சபை அதிகாரம் ஏற்றுக்கொண்டால், நிலைமை இனிமேல் எப்படி இருக்குமோ சொல்ல முடியாது. ஆரம்பத்தில் இந்தப் போடு என்றால், ஆதிக்கத்தில் எந்தப் போடு போடுவார்களோ பொறுத்துப் பார்ப்போம்! இது கேடுகாலத்தின் அறிகுறியேயொழிய வேறல்ல.

---

உலகத்தில் உள்ள ஆங்கிலம், பிரஞ்சு, லத்தின், கிரீக் முதலிய அகராதிகளில் மூன்றில் ஒரு பங்கு ஆங்கில வார்த்தைகளே காணப்படுகின்றன.

சொக்கநாதன்
அல்லது
ரங்கன் திருவிளையாடல்
விலை அணு 12.
தபால் சார்ஜ் அணு 5.
மானேஜர்:—"தமிழ் மணி"

நரஸூஸ் டீ குடியுங்கள்
நறுமணத்திற்கும் பானத்திற்கும் நிகரற்றது
சில டீ இலைகள்- சிறந்த மணமுள்ளதாயினும் ருசிப்பதில்லை. மற்றும் சில வாய்க்கு ருசிப்பினும் மணமிருப்பதில்லை. நரஸூஸ்வால் பொறுக்கி பதம் செய்யப்படும் டீ சிறந்த மணத்துடன்கூடிய உங்களுக்குகந்த ஓர் உயர்ந்த பானமளிக்கும்.
எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மேற்கண்ட இடங்களில் கிளை ஆபீசுகள் சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்:—
பம்பாய், டெல்லி, ரங்கூன், கொழும்பு.
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
பாக்டரிகள்:-
சென்னை, சேலம். MNTK-12

# தமிழ் மணி

சென்னை—விஷு ௵ தை மீ 12௳ (25—1—42)


## சுதந்திர தினம்!

இந்தியர் லட்சியம் பூர்ண சுதந்திரம். இதை வற்புறுத்திக் காங்கிரஸ் பல வருடங்களுக்கு முன் தீர்மானித்திருக்கிறது. வருடந்தோறும், ஜனவரி மாதம் 26ந் தேதியைப் பூர்ண சுதந்திர தினமாகத் தேச மக்கள் கொண்டாடி வருகிறார்கள். அன்று பூர்ண சுதந்திரப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுகின்றனர். அடுத்த திங்கட்கிழமை சுதந்திர தினமாகும்; அன்று இந்தியர் சுதந்திர விரதம் கொள்ளவேண்டியது அவசியம். இதற்கு முந்திய வருடங்களைவிட, இவ்வருடம் சுதந்திர விரதம் பூண்டு கொள்ளவேண்டியது அவசியத்திலும் அவசியம். பூர்ண சுதந்திரப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுவதற்கு ஆடம்பரம்வேண்டியதில்லை; நீண்ட பிரசங்கம் வேண்டியதில்லை; ஆடம்பரமான பேச்சும், அலங்காரங்களும் வேண்டியதில்லை; மன உறுதி ஒன்றே வேண்டும். அந்த மன உறுதியுடன் சுதந்திர விரதம் கொள்ள வேண்டும்; அதுதான் முக்கியம்.

### அவசியம் என்ன?

இதற்கு முந்திய வருடங்களைவிட, இவ்வருடம் சுதந்திர விரதம் கொள்ளவேண்டிய முக்கிய அவசியம் என்ன வந்தது? இது யுத்த காலம்; உலகின் ஒரு கோடியிலிருந்து, மறு கோடிவரையில் யுத்தம் பரவி வருகிறது. இந்தியாவின் எல்லையோரத்திலும் யுத்தம் வந்துவிட்டது. எந்த நிமிஷத்திலும், எதிரி நம்மீது படையெடுத்து வரலாம்; நம்மைத் தாக்கலாம். இந்தச் சமயத்தில், நம் தேசத்தை, நம் தாய் நாட்டைப் பாதுகாக்காமல் நாம் ஒதுங்கி நிற்பதா? முடியாது. எப்படியும் எதிரியை எதிர்த்து முறியடிக்க வேண்டும்; நமது நாட்டின் தற்காப்பை நாமே மேற்கொள்ளவேண்டும். நம்மை அடக்கியாளும் பிரிட்டன், நம்மைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் நாம் ஏமாந்துவிடக் கூடாது! நம் தேசத்தைப் பாதுகாக்க நமக்குச் சுதந்திரம் வேண்டும்; அந்தச் சுதந்திரத்தை இப்பொழுதே, இந்த யுத்த சமயத்திலே நாம் எப்படியும் பெற்றே தீரவேண்டும். இந்த சுதந்திர தினத்தில் ஒவ்வொரு இந்தியனும் எடுத்துக்கொள்ளவேண்டிய விரதம் இதுதான். நாம் சுதந்திரமடைந்தே தீருவோம்; அந்த சுதந்திரம் நமது பிறப்புரிமை; அந்த உரிமையைப் பறிக்க யாராலும் முடியாது; கடவுளாலும் முடியாது!

## ஆதரித்ததேன்?

பர்தோலியில் காரியக் கமிட்டியில் வந்த தீர்மானத்தைக் காந்திஜி எதிர்த்தார்; மனச் சாட்சியை விபரீதப்படுத்தாமல் எல்லோரும், அ. இ. கா. கமிட்டியில் அந்தத் தீர்மானத்தின் மீது வோட் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; ஆனால், வார்தாவில் காந்திஜியின் நிலைமை மாறிவிட்டது. பர்தோலித் தீர்மானத்தை ஏகமனதாக ஆதரிக்கும்படி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் எல்லோரையும் அவரே கேட்டுக் கொண்டார். இதற்குக் காரணம் என்ன? காந்திஜியின் நிலைமை திடீரென மாறியதேன்? பர்தோலித் தீர்மானத்தை அவர் ஏன் ஆதரித்தார்? காந்திஜியே அதற்குக் காரணம் கூறியிருக்கிறார்.

### காந்திஜி கண்ட உண்மை.

பர்தோலித் தீரமானத்துக்குப் பின்தான் காந்திஜி அவருடைய நிலைமையை உணர்ந்தார். பல காங்கிரஸ் தலைவர்களும், விசேஷமாக, இந்தியரின் பிரதி நிதிகளாகிய காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரும் . காந்திஜியின் அஹிம்சைக் கொள்கையை மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லை; மனப் பூர்வமாகக் காந்திஜியைப் பின்பற்றவுமில்லை; காந்திஜி சொல்லுகிறாரே என்றுதான் அவரைப் பின்பற்றி வந்தார்கள். இந்த உண்மையைக் கண்டபின்தான் காந்திஜியின் நிலைமை மாறியது; மனப் பூர்வமாக ஆதரிக்காத ஒரு கொள்கையைப் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிருக்கக் காந்திஜி விரும்பவில்லை. ஆகவே, அந்தத் தீர்மானத்தின்மீது வோட் எடுக்க வேண்டுமென்று அவர் அ. இ. கா. கமிட்டியில் வற்புறுத்தவில்லை. அந்தத் தீர்மானத்தின்மீது வோட் எடுக்கவேண்டுமென்று காந்திஜிமட்டும் வற்புறுத்தியிருப்பாரேயாயின், பெரும்பான்மையான அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள், காந்திஜியின் கட்சியை ஆதரிப்பதற்காக அவர்கள் மனச் சாட்சியையும் மீறித் தீர்மானத்தை எதிர்த்து வோட் செய்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. இதைக் காந்திஜி விரும்பவில்லை; அந்த முடிவு உண்மை நிலைமையைத் தவறாக எடுத்துக் காட்டுவதாகும். இது காந்திஜியின் அஹிம்ஸா கொள்கைக்கே இது மாறானது. ஆகவே, காந்திஜி பர்தோலித் தீர்மானத்தை எல்லோரும் ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார். பர்தோலித் தீர்மானத்தை ஆதரிக்கும்படி காந்திஜி கேட்டுக் கொண்டதற்குக் காரணம் இதுதான். காந்திஜியைக் குறை சொல்லுபவர் இதைக் கவனிப்பார்களாக.

## மந்திரி தந்திரம்!

இந்தியாவில் மோட்டார் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று வால் சந்த் ஹிரா சந்த் போன்ற பிரபலஸ்தர் இந்திய சர்க்காரை நெடுங்காலம் கேட்டு வந்தனர். யுத்தம் ஆரம்பித்ததும், இந்தத் தொழிலுக்கு ரொம்ப அவசியம் வந்தது. ஆனால், சர்க்கார் அந்தத் தொழிலை ஆரம்பிக்க அனுமதிகொடுக்க மறுத்துவிட்டனர். அது யுத்த முயற்சிக்கு இடையூறு செய்யுமென்று சொன்னார்கள். ஆனால், திடீரென அதே மோட்டார் தொழில் ஆரம்பிக்கும் உரிமை, ஒரு அமெரிக்கக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாகப் பார்லிமெண்டில் கேள்வி வந்தபோது, இந்திய மந்திரி அமெரி, வெகு தந்திரமாகப் பதில் சொன்னார்! அமெரிக்கக் கம்பெனியார் இந்தியாவில் மோட்டார் உற்பத்தி செய்யப் போவதில்லை; மோட்டார் பாகங்களை ஒன்றாக இணைக்கும் தொழிலைத்தான் ஆரம்பிக்கப்போகிறார்கள்; இத்துடன் மோட்டார் ரிப்பேர் வேலைகளையும் கவனிப்பார்களென்று வெகு சாமர்த்தியமாகப் பதில் சொல்லி மழுப்பினார்! இது போன்ற தொழிற்சாலைகள் இந்தியாவில் பல இருக்கின்றன வென்றும் சொன்னார். இந்திய மந்திரி சொன்னது உண்மைதான். ஆனால், யுத்த நெருக்கடி காரணமாக அமெரிக்காவிலிருந்து மோட்டார் பாகங்கள் இந்தியாவுக்கு வர முடியாமற் போகிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அமெரிக்கக் கம்பெனியார் என்ன செய்வார்கள்? அப்பொழுது மோட்டார் பாகங்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்யச் சர்க்கார் அனுமதிப்பார்களா? அனுமதித்துத்தானே தீரவேண்டும்? அது போகட்டும்; இந்தியக் கம்பெனிக்கு அனுமதி கொடுக்க மறுத்த காரணம் என்ன? இந்தியாவில் ஒரு மோட்டார் தொழிலை ஆரம்பித்தால், யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இதர தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களை, மோட்டார் தொழிற்சாலைக்கு இழுத்துக்கொள்ள நேரிடும் என்று காரணம் காட்டித்தானே இந்தியக் கம்பெனிக்கு அனுமதி கொடுக்க மறுத்தார்கள். இது இந்தியக் கம்பெனிக்குச் செல்லுமென்றால், அமெரிக்கக் கம்பெனிக்கும் ஏன் செல்லாது? இதற்கு இந்திய மந்திரி என்ன பதில் சொல்லப் போகிறார்? இந்தியாவில், இந்தியர் ஒரு மோட்டார் தொழிலை ஆரம்பிப்பது பிரிட்டிஷாருக்குப் பிடிக்கவில்லை; அந்த முயற்சிக்கு இடையூறு செய்யவே இந்த நொண்டிச் சமாதானம்! இதுதான் உண்மை.

## நியாயமா?

பர்மா முதன் மந்திரியாயிருந்த ஊ-ஸா, ஜப்பானியருடன் அந்தரங்க உறவு வைத்துக்கொண்டிருந்ததாகச் சந்தேகித்து, பிரிட்டிஷார் அவரைக் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர். இது பர்மிய மக்களைத் திடுக்கிட வைத்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஊ-ஸாவுக்கு முன்னால் முதன் மந்திரியாக இருந்த டாக்டர். பாமாவையும் பிரிட்டிஷார் கைதுசெய்து, அவரை இன்னமும் காவலில் வைத்திருக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன வென்பது தெரியவில்லை. இரு மாஜி முதன் மந்திரிகளும் உத்தமர்; சிறந்த தேச பக்தர்; நெருக்கடியான இச் சந்தர்ப்பத்தில், ஊ-ஸா அவருடைய தாய் நாட்டை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுப்பவர் என்று கனவில்கூட நினைக்க முடியவில்லை. பர்மாவுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமெனக் கோரி, ஊ-ஸா இங்கிலாந்து சென்றார். இந்திய மந்திரி அமெரி, முதன் மந்திரி சர்ச்சில் முதலியோரைக் கண்டு பேசினார் யுத்தத்துக்குப் பின் பர்மாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆனால், அவர் கோரிக்கை ஈடேறவில்லை. மனமுடைந்து அமெரிக்கா திரும்பினார். அமெரிக்கத் தலைவர்களைக் கண்டு, பர்மாவின் கோரிக்கையைத் தெரிவித்தார். அதற்குள் ஜப்பானியர் பர்மாமீது யுத்தம் ஆரம்பித்து விட்டார்கள். ஊ-ஸா அவசரமாகத் தாய் நாடு திரும்பினார். பிரிட்டிஷார் அவரைச் சந்தேகித்து, கைது செய்து காவலில் வைத்திருக்கிறார்கள். இது நியாயமா? பர்மியரின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற இதுவா வழி? இல்லவே இல்லை.

## டோஜோ ஜாலம்!

பாஸிபிக்கில் திடீரென யுத்தம் ஆரம்பித்து, பல தீவுகளையும், இந்தோ-சீனா, தாய்லந்து, பர்மா, மலேயா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளை அக்கிரமமாக ஆக்ரமிக்கும் ஜப்பான் முதன் மந்திரி டோஜோ, கீழ் தேசங்களிடம் ரொம்பப் பரிவு காட்டுகிறார்! இந்த யுத்தத்தில் ஜப்பானுடன் ஒத்துழைக்கும் நாடுகளுக்கு யுத்த முடிவில் சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லுகிறார். இது வெறும் ஜாலம்! ஜப்பான் ஆக்ரமித்த கொரியா கதி என்னவாயிற்று? அப்புறம் மஞ்சுகோ நிலைமை என்ன? இந்தோ-சீனா, தாய்லாந்து முதலிய இரு நாடுகளும் இன்று என்ன நிலைமையிலிருக்கின்றன? கொரியா, மஞ்சுகோ முதலிய இருநாடுகளும் இன்று ஜப்பானுக்கு அடிமைநாடுகள். அங்கு பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரங்கூடக் கிடையாது. கொரியா பாஷைக்குக்கூட ஜப்பானியர் உலை வைத்துவிட்டனர்! ஆசியாக்காரர் என்று வேஷம் போடும் ஜப்பானியர், ஆசியாக்காரர் சுதந்திரத்துக்கே அழிவைத் தேடுகின்றனர். இந்த நிலைமையில் டோஜோ ஜால வார்த்தைகளில் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? அது பெரிய ஆபத்தில் வந்து தான் முடியும்! அப்பந் திருடிய பூனைகள், குரங்கிடம் மத்யஸ்தஞ் செய்யப் போன கதையாகவே, ஜப்பானியரை நம்பும் கீழ் தேசங்களின் கதி வந்து முடியுமென்பதில் சந்தேகமில்லை!

# மணியோசை

**ஸி. ராஜகோபாலாச்சாரியார்,**
**சென்னை.**

ராஜ தந்திரியே!

அரசியல் தந்திரத்திலும், தூர திருஷ்டியிலும் உங்களைத் தோற்கடிக்கக் கூடியவர் வெகு சிலர்; பேச்சிலும் மகா சமர்த்தர்; குட்டிக் கதை சொல்லிக், கருத்தைத் தெளிவு படுத்துவதில் உங்களுக்கு இணையாக யாரையும் சொல்ல முடியாது! பர்தோலித் தீர்மானத்தை வார்தாவிலும் நிறைவேற்றிவைத்து, உங்கள் சபதத்தைத் தீர்த்து விட்டீர்கள்! இனிமேல் உங்கள் வேலை என்ன? பிரசாரம்; பிரசாரத்துக்காகத் தமிழ்நாடு எங்கும் யாத்திரை போக ஒரு திட்டமும் போட்டு விட்டீர்கள். அந்தப் பிரசாரத்தை முதன் முதலில் சென்னையிலேயே ஆரம்பித்து வைத்தீர்கள். "ஆபத்தான இந்த நிலைமையில், இந்தியர் என்ன செய்ய வேண்டும்? எந்தவிதமான ஆபத்துக்கும், எதிரியை எதிர்ப்பதற்கும், இந்திய மக்கள் தயாராக இருக்க வேண்டும்; இந்திய வாசலில் வந்து நிற்கும் எதிரி, இரு நாடுகள்மீது கண் வைத்திருக்கிறான். ஒன்று ஆஸ்திரேலியா; மற்றொன்று இந்தியா. சாத்தான் அந்த எதிரியை எந்தப் பக்கத்தில் இழுத்துக் கொண்டு போவானோ யாருக்கும் தெரியாது! எந்தப் பக்கத்தில் இழுத்துக்கொண்டு போனாலும் ஆபத்துத்தான்; இன்று இல்லாதுபோனாலும், நாளைக்கு எதிரி எப்படியும் வந்துதான் தீருவான்! இந்தச் சமயத்தில் பிரிட்டிஷார் இந்தியர் கோரிக்கைகளைக் கவனியாமல், செவிட்டுக் காதைத் திருப்புவது கூடாது! வைசிராய் நிர்வாக சபையை இந்தியமயமாக்கினால் மட்டும் போதாது; இந்தியா சுதந்திர நாடு என்று அறிவிக்க வேண்டும்; சகல பொறுப்புகளுடன் கூடிய தேசீய சர்க்கார் அமைத்தால்தான் இந்தியர் திருப்தியடைவார்கள். இப்பொழுதே, இந்த யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே இந்த யுத்தத்திற்காக நமக்குப் பூர்ண ஆதிக்கம் வந்து சேரவேண்டும்; அப்படி நடந்தால்தான் இந்தியாவில் தற்காப்பு இந்திய விவகாரமாகி விடும்!" என்று சென்னைக் கோகலே மண்டபத்தில் பேசினீர்கள். நீங்கள் பேசியதெல்லாம் சரிதான்; ஆனால், வரட்டு ஜம்பத்தில் ஊறிப் போயிருக்கும் பிரிட்டிஷார் வழிக்கு வருவார்களா? அதுதான் சந்தேகம். ஆனால், கொஞ்சக் காலம் கழித்தாவது பிரிட்டிஷாருக்கு ஞானோதயம் ஏற்படுமா என்று நீங்களே ஒரு கேள்வி கேட்டீர்கள். அந்த ஞானோதயம் ஏற்படுமா, எப்பொழுது ஏற்படும் என்பதைப் பொறுத்து பார்ப்போம்! ஆனால், அடிமேல், அடி விழுந்தால்தான் அம்மியும் நகரும்; அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்! பிரிட்டிஷாரை ஓயாமல் இடித்துக் கொண்டே இருந்தால்தான், அவர்கள் கொஞ்சமாவது அசைந்து கொடுப்பார்கள்; இன்றேல், செக்குப் பிள்ளையார் மாதிரி அசையாமல் இருப்பார்கள்! ஆதலால், உங்கள் பிரசாரத்தை விடாமல், நடத்துங்கள்; பலன் கிடைக்கிறதா இல்லையாவென்று பார்ப்போம்.

டிங்—டாங்

**பர்மா கவர்னர்,**
**ரங்கூன்.**

துரையே,

பர்மாவைச் சூழ்ந்திருக்கும் ஆபத்து என்னவென்பது உங்களுக்குத் தெரியும். இந்த ஆபத்தான சமயத்தில் நீங்கள் பர்மாவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தீர்கள். "பர்மியரே, ஒன்றுபட்டு எழுங்கள்! ஒவ்வொரு கூரைமீதிருந்தும், வீட்டின் மாடிமீதிருந்தும், காட்டிலிருந்தும் போர் செய்யுங்கள்! எதிரிக்கு விட்டுக் கொடுக்காதீர்கள்! வேறு வழியில்லையேல், உங்கள் வீடுகளுக்கே தீ வைத்து விடுங்கள்!" என்று அந்த வேண்டுகோளில் குறிப்பிட்டிருந்தீர்கள். வேண்டுகோள் வீரம் நிறைந்ததுதான்; ஆனால், இந்த வீர புத்தி எங்கனவே ஏன் இல்லாது போயிற்று? சுமார் 150 வருடங்களாகப் பர்மாவில் பிரிட்டிஷார் ஆதிக்கம் இருந்துதானே வந்தது? அந்த காலத்திலெல்லாம் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? பர்மியருக்குச் சுதந்திரம் ஒப்படைத்தீர்களா? பர்மாவைப் பாதுகாக்கும் பொறுப்பை பர்மியரிடம் கொடுத்தீர்களா? இல்லை. கடைசி நேரத்தில், எதிரி பர்மாவுக்குள் புகுந்தபின், பர்மிய மக்களைத் தட்டி எழுப்பி என்ன பலன்? சுதந்திரமற்ற, படைப்பலமில்லாத பர்மியர், பலமிகுந்த ஜப்பான் எதிரியை எப்படி எதிர்த்து நிற்க முடியும்? வீடுகளுக்குத் தீ வைத்து, பர்மியர் தற்கொலைசெய்து கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தியாவுக்கும் பர்மா அவதி ஏற்படக்கூடாதே யென்பதுதான் என் கவலை! இந்த எதிரிகளிடமிருந்து இந்தியாவை இனிமேல் ஆண்டவன்தான் காப்பற்றவேண்டும்.

டிங்—டாங்

**சர்தார் பட்டேல்,**
**பம்பாய்.**

சத்தியாக்கிரக வீரரே!

பர்தோலித் தீர்மானத்தை நீங்கள் எதிர்த்த போதிலும், காந்திஜியின் ஆணைக்குப் பணிந்து, அதை ஆதரித்து வருகிறீர்கள். ஆனால், பம்பாயில் கூடிய சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசியபோது, "சட்ட சபைத் திட்டத்தை மறந்து விடுங்கள்; அதற்கு இது தருணமல்ல; நிர்மாண திட்டத்தையே எல்லோரும் கவனிக்கவேண்டும்" என்று சொன்னீர்கள். உங்கள் பேச்சு சத்திய மூர்த்தி ஐயர் போன்ற சட்ட சபை வேட்டைக்காரருக்கு, நாராசம்போல் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. என்றாலும், என்ன செய்வது? ஊமையன் கனவு கண்டமாதிரி வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டியதுதான்!

டிங்—டாங்

**வி. டி. சாவர்க்கார்,**
**பம்பாய்.**

ஹிந்துத் தலைவரே,

பிரிட்டிஷாரின் மூர்க்கப் பிடிவாதம் உங்களுக்குக்கூட ஒருவித வெறுப்பையும், ஆச்சரியத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. "பூனாத் தீர்மானம் நிறைவேறிய காலமுதல், காங்கிரஸ் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் சர்க்காருடன் சமரசம் செய்துகொள்ள முயற்சித்தும், சர்க்கார் இன்னமும் பிடிவாதம் செய்வது ஆச்சரியமாகவே இருக்கிறது. பிரிட்டிஷாருக்குக் காந்திஜியைப்போல் உற்ற நண்பர் வேறு யாரும் கிடையாது" என்று ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் ஆச்சரியத்தைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை! ஏன்? பிரிட்டிஷாரின் பிறவிக் குணம் அதுதான்! காங்கிரஸ் வலியச் சமரசத்துக்குச் சென்றதால் தான் பிரிட்டிஷார் இன்னமும் உச்சாணிக் கொம்பில் ஏறிக்கொண்டிருக்கிறார்கள்! காங்கிரஸ் மட்டும் தீவிரமாக ஒரு போராட்டத்தை நடத்தி, இரண்டிலொன்று பார்த்தே தீருவதென்ற உறுதியுடன் கடைசி வரை போராட்டத்தை நடத்தியிருந்தால், பிரிட்டிஷார் கட்டாயம் இறங்கி வந்திருப்பார்கள். எட்டினால் குடுமியைப் பிடிப்பதும் எட்டாவிட்டால் காலைப் பிடிப்பதும் பிரிட்டிஷ் ராஜ தந்திரமென்பதை நீங்கள் இன்னமும் அறியாமலிருப்பது விந்தையே!

டிங்—டாங்

**டாக்டர். சியாம் பிரசாத்**
**முக்கர்ஜி,**
**கல்கத்தா.**

நிதி மந்திரியே,

இந்தியாவில் ஒற்றுமை இல்லை; வகுப்புப் பிரிவினை உச்ச நிலையடைந்திருக்கிறது; இந்த நிலைமையில் இந்தியாவுக்கு எப்படிச் சுதந்திரம் கொடுக்க முடியுமென்பதே பிரிட்டிஷாரின் நெடுங்காலப் பல்லவி! இந்தியர் சுதந்திரம் கேட்கும்போதெல்லாம், இந்தப் பல்லவியைத்தான் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். இதைக் கேட்டுக் கேட்டு இந்தியர் காதும் புளித்துப்போய் விட்டது. ஆனால், பிரிட்டிஷாருக்கு நீங்கள் சரியான சூடு கொடுத்திருக்கிறீர்கள். வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் கூட்டு மந்திரி சபையைச் சுட்டிக் காட்டி, "இந்தியர், விசேஷமாக ஹிந்து-முஸ்லிம்கள் ஏன் ஒன்றுபட முடியாது?" என்று கேட்டிருக்கிறீர்கள். ஹிந்து-முஸ்லிம்களோ, அல்லது, இதர வகுப்பினரோ ஒன்றுபட முடியாது என்பதெல்லாம் வெறும் "ஹம்பக்!" இந்தியாவிலுள்ள சகல வகுப்பினரும் ஒன்றுபட விடாமல் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருப்பது பிரிட்டிஷாரும், இந்தியாவிலுள்ள வகுப்புவாத விஷமிகளுமேயாவர்! இன்று பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லட்டும்; இந்தியாவில் உடனே வகுப்பு ஒற்றுமை ஏற்படுகிறதா, இல்லையா வென்று பார்ப்போம். இதற்குப் பிரிட்டிஷார் தயாரா? இல்லை; ஆதலால்தான், நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாக்கு என்று, என்ன மெல்லாமோ போலிக் காரணங்களைக் கூறிக் காலங் கடத்திக் கொண்டு வருகிறார்கள்!

டிங்—டாங்

**பஸ்லுல் ஹக்,**
**கல்கத்தா.**

வங்க சிங்கமே!

வங்காளத்தில் நீங்கள் அமைத்திருக்கும் கூட்டு மந்திரி சபையே, லீகருக்குப் பொல்லாத வயிற்றெரிச்சலை உண்டு பண்ணியிருக்கிறது! ஆகவே, வங்க லீகர், உங்கள் மந்திரி சபையைக் கலைக்கப் பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும் சதிசெய்து வருகின்றனர். ஊருராகச் சென்று, உங்கள்மீது அபாண்டப் பொய் சொல்லி வருகிறார்கள். ஆனால், அவ்வித பொய் பிரசாரம் உங்களையோ உங்கள் மந்திரி சபையையோ கடுகளவுகூட அசைக்க முடியாது என்பது நிச்சயம். வங்க ஹிந்து-முஸ்லிம் மக்கள் உங்கள் மந்திரி சபையை ஆதரித்து நிற்கும் வரையில், லீகர் தங்கள் வாயிலேயே மண்ணைக் கொட்டிக் கொள்ளுவார்கள்! அவர்கள் கெடு புத்தி அவர்களுக்கே கேடாய் வந்து முடியும்! அதில் சந்தேகமே வேண்டாம்.

டிங்—டாங்

**எஸ். ஹைதர் இமாம்,**
**பாட்னா.**

முஸ்லிம் தலைவரே,

லீகின் உருப்படாத திட்டத்தின் யோக்யதையை இப்பொழுதுதான் முஸ்லிம் மக்களும், தலைவர்களும் உணர்ந்து வருகிறார்கள். "லீகின் திட்டம் பயனற்றது; தேசீயப் பிரச்னையை அது திருப்திகரமாகத் தீர்க்கக் கூடியதல்ல. யுத்த காலத்தில் இந்திய மந்திரியின் அதிகாரத்தைக்கட்டுப்படுத்த வேண்டும். காங்கிரசும், முஸ்லிம் தலைவர்களும் ஆதரிக்கும் ஒரு மத்திய சர்க்காரைத் தாமதமின்றி ஆரம்பிக்கவேண்டும்" என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறீர்கள். மெய்தான்; ஆனால், முஸ்லிம் தலைவர்கள் ஒப்புக்கொள்ளும் ஒரு திட்டத்தை லீகர் ஆதரிப்பார்களா? ஒருபோதும், ஆதரிக்கமாட்டார்கள், லீகரும் ஒரு வழிக்கு வரமாட்டார்கள். கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும் லீகருக்கு இயற்கைக் குணம், பிரிட்டிஷார் தட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கும்வரையில், அவர்களுக்கு நிதான புத்தி ஏற்படப் போவதில்லை. லீகரும், காங்கிரஸ்காரரும் ஒரு வழிக்கு வந்தால் கூட பிரிட்டிஷார் வழிக்கு வருவார்களா வென்பது வேறு விஷயம். இவ்வாறு இந்திய அரசியல் நெருக்கடியில் தகராறும் வளர்ந்துகொண்டுதான் போகும். இதற்கும் ஒரே வழிதானுண்டு; இந்திய மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, பிரிட்டிஷாரை நிர்ப்பந்திக்கவேண்டும்; சடையைப் பிடித்தால்தான் சன்னியாசி தானே வருவான்! பிரிட்டிஷாரும் அப்படித்தான். அவர்கள் சடையைப் பிடித்து மடக்கினாலொழிய அவர்கள் ஒருபோதும் வழிக்கு வரமாட்டார்கள்! இது சத்தியம்.

டிங்—டாங்

**ஈ. வெ, ராமசாமி நாயக்கர்,**
**சென்னை.**

சு. ம. "பிரம்மா"!

வயதாகியும், வருடங்கள் பல கழிந்தும், உங்களைப் பிடித்த வக்ர வாதம் ஒழிந்த பாட்டைக் காணோம்! மீண்டும் தமிழர், திராவிடர் என்ற உதவாக்கரை வாதத்தையே கிளப்புகிறீர்கள்! தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் எல்லோரும் தமிழர்; தமிழர் என்றாலும், திராவிடர் என்றாலும் ஒன்றுதான் என்று ஈரோட்டில் கூடிய தமிழ் திருநாள் கூட்டமொன்றில் பேசினீர்கள்; இதைக் கேட்டுச் சிரிப்பாய்ச் சிரித்தேன்! தெலுங்கரோ, கன்னடரோ, மலையாளிகளோ தமிழர் என்று ஒப்புக்கொள்ளுவார்களா? ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சந்தேகமிருந்தால், தெலுங்கு, கன்னடப் பிரதேசங்களில் போய்க் கேட்டுப் பாருங்கள்; உண்மை தெரியும். உண்மையை அறிந்து கொள்ளாமல், மீண்டும், மீண்டும் பழைய வரட்டுவாதம் பேசிக் கொண்டிருக்க வேண்டாம்; அது உங்கள் மூளையை அசடாக்கிவிடும்! அப்புறம் அது பெரும் ஆபத்தாக வந்து முடிந்தாலும் முடியலாம்! கவனமிருக்கட்டும்.

டிங்—டாங்

# டம்-டம் குண்டு

## மூர்க்கனும், முதலையும்!

## சென்னையில் குதித்துவிடுவார்களா?

## எந்தப் பூனைக் குட்டிகள்?

## சபாஷ் மிஸ்டர். ரூதர்போர்டு

## புத்தியை மூட்டை கட்டிவிட்டாரா?

மூர்க்கனுக்கும், முதலைக்கும் கொஞ்சம் பொருத்த முண்டு! உடல் அமைப்பில் அல்ல; குண அமைப்பில் மூர்க்கன் பிடித்ததை விடமாட்டான்; ஒரே சாதனையாகச் சாதிப்பான். முதலையும் அப்படியே; கையில் அகப்பட்டதைத் தப்பவிடாது; விடாப் பிடியாகப் பிடித்துக்கொள்ளும். இந்தப் பிடிவாதம் எப்படி மூர்க்கனுக்கும், முதலைக்கும் ஏற்பட்டதோ சொல்ல முடியாது. முதலையைப் பார்த்து மூர்க்கன் கற்றுக்கொண்டானா, அல்லது மூர்க்கனைப் பார்த்து முதலை கற்றுக் கொண்டதா? இதைப்பற்றி யாரும் இதுவரையில் எழுதி வைக்கவில்லை! ஆனால், சர்க்காருக்கும், அதிகாரிகளுக்கும் இவ்வித மூர்க்கப் பிடிவாதம் ஆதியிலிருந்து ஏற்பட்டதல்ல; இடையில் ஏற்பட்டதுதான்! அது அதிகார மமதையால் ஏற்பட்டதென்பதைச் சந்தேகமின்றித் தெரிந்துகொள்ளலாம்! அதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்களு முண்டு. சென்னை சர்க்காரைப் பொறுத்தவரையில், இது சர்வ சாதாரணமான சம்பவம்; இல்லையென்று சர்க்கார்கூட மறுக்க முடியாது.

* * * *

சென்னையில் ஏற்பட்ட யுத்த பீதியைச் சர்க்கார் கண்டிக்கிறார்கள்; ஜனங்கள் ஊரைவிட்டு ஓடக்கூடாது என்று அடிக்கடி சொல்லிக் கொண்டுதானிருக்கிறார்கள்! ஆனால், ஜனங்கள் பீதி தணிந்ததா? இல்லை; ஜனங்கள் மனதில் நம்பிக்கை ஏற்பட்டதா? அதுவுமில்லை. சர்க்கார் எவ்வளவுக்கு ஜனங்கள் பீதியைப் போக்க நினைக்கிறார்களோ, அவ்வளவுக்கு ஜனங்கள் பீதி அதிகரித்துக் கொண்டே வருகிறது! இதற்குமுன் சுமார் 2 லக்ஷம் ஜனங்கள் சென்னை நகரிலிருந்து காலி செய்திருப்பார்களேயானல், சென்ற இரண்டொரு வாரங்களில் இன்னம் 1 லக்ஷம் ஜனங்கள் காலி செய்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. இதற்குக் காரணம் ஜனங்களல்ல; சர்க்கார்தான்! ஏன்? ஜனங்களின் யுத்த பீதியைப் போக்கச் சர்க்கார் சரியான வழியைப் பின்பற்றவில்லை; ஆதியிலிருந்தே அவர்கள் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவில்லை; அதன் பயனாக ஜனங்களின் யுத்த பீதி அதிகரித்துக்கொண்டே வந்தது; ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக ஊரைவிட்டுக் காலி செய்யலானார்கள்; இன்னமும் காலி செய்து கொண்டேயிருக்கிறார்கள்!

* * * *

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்த மாதிரி, இந்தச் சமயத்தில் பர்மாவிலும், மலேயாவிலும் ஜப்பானியர் தீவிரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். தினசரி ஜப்பானியர் சிங்கப்பூரை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றனர். சிங்கப்பூர் விழுந்து விட்டதாகக்கூட ஒரு பொய்யான வதந்தி மக்களிடையே பரவியது! ஆஸ்திரேலியா வரையில் ஜப்பான் ராணுவங்கள் போயிருக்கின்றன என்றும் ஜனங்கள் பேசிக் கொள்ளுகிறார்கள்! சிங்கப்பூர் விழுந்ததோ, இல்லையோ; அதைப்பற்றி அக்கரை இல்லை; சிங்கப்பூர் விழுந்து விட்டால் தான் என்ன? ஜப்பானியர் ஒரே பாய்ச்சலாகச் சென்னையில் வந்து குதித்து விடுவார்களா? இல்லை. ஆகவே, மக்கள் பீதியடைவதற்குக் காரணமே இல்லை; என்றாலும், மலேயாவிலும், பர்மாவிலும் பிரிட்டிஷ் ராணுவங்களுக்குக் கிடைத்து வரும் தோல்வியே மக்கள் பீதியை அதிகரித்து வருகிறது. இந்தப் பீதி சென்னையில் மட்டுமல்ல; இந்தியாவெங்கும் பரவி விட்டது! ஆகவே, சென்னை சர்க்கார், சென்னை மக்களை மட்டும் குறைகூறுவதில் பயனில்லை; சென்னை மக்களைக் குறை கூறிப் பொழுது போக்குவதை விட்டு, சென்னை மக்ளின் பீதியைப் போக்க வழி தேடுவார்களாக.

* * * *

சர்க்கார் வழிக்கு வந்தால்கூட, கவர்னர் ஆலோசனையாளர் வழிக்கு வருவதாக இல்லை! இவர்களில் மிஸ்டர். ரூதர்போர்டு ஒருவர்! இவரைப் பற்றி ஏற்கனவே பல புகார்கள் வந்தன. மிஸ்டர். ரூதர்போர்டைக் கண்டித்துங்கூட, அவர் பிடிவாதம் தொலையவில்லை. முதலையைப் போலவே இருப்பேன் என்று பந்தயங் கட்டுகிறார். சென்னையில் அவர் பேசியதைப் போலவே, தூத்துக்குடியிலும் பேச்சை வளர்த்திருக்கிறார்! "சென்னையில் விஷயமறிந்த படித்தவர்கள் கூடப் பீதியுற்ற பூனைக்குட்டிகளைப் போல் தங்கள் இருப்பிடங்களை விட்டு விட்டு ஓடுகிறார்கள்!" என்று அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசியிருக்கிறார்! மிஸ்டர். ரூதர் போர்டு பேசியதை ஒப்புக்கொள்ளத் தயார். ஆனால், அவர் இன்னமும் விளக்கமாகப் பேசியிருந்தால் ரொம்ப நலமாக இருந்திருக்கும். "பீதியுற்ற பூனைக்குட்டிகளைப்போல், இந்தியர் மட்டும் ஓடவில்லை; வெள்ளையரும் மலைகாடுகள் தேடி ஓடுகிறார்கள்!" என்று அவர் சொல்லி இருந்தால், அவருக்குச் சபாஷ் பட்டம் கொடுத்திருக்கலாம்! ஆனால், அவர் அவ்வாறு பேசவில்லை.

* * * *

இவ்வளவு மோசமான புத்தி மிஸ்டர் ரூதர்போர்டுக்கு ஏற்பட்டது விபரீதந்தான்! இவர் ரொம்பச் சாதுர்யமாகப் பேசக்கூடியவர் என்று சொல்லுகிறார்கள்; ஆனால், இவர் பேச்சில் சாதுர்யத்தையே காணோம். பேச்சில்தான் சாதுர்யமில்லை; அதை மூட்டை கட்டி வைத்துவிட்டாலும், புத்தியையுமா மூட்டை கட்டிச் சீமைக்குப் பார்சல் செய்துவிட்டார்? அப்படி இருக்காது! அப்படிப் பார்சல் செய்திருந்தால், கவர்னர் ஆலோசனையாளராக ஒரு நிமிஷங்கூட அவரால் இருந்திருக்கமுடியாது! புத்தி அவர் மண்டையில் இருக்கத்தான் செய்யும்! இருந்தும், மலேயா, பர்மா முதலிய நாடுகளின் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல் அவர் பேசியிருக்கலாம்! பர்மா, மலேயா முதலிய நாடுகளின் நிலைமை சென்னை மக்களைவிட மிஸ்டர். ரூதர்போர்டுக்குத்தான் நன்றாகத் தெரிந்திருக்கும்; தெரிந்திருந்தும், சென்னை மக்கள் பீதியைக் கிண்டல் செய்யும் தோரணையில் அவர் பேசியிருப்பது சாதுர்யமற்ற பேச்சு! மிஸ்டர் ரூதர் போர்டுக்கு இருக்கும் மூளை அளவு சென்னை மக்களுக்கும் உண்டு; அவர் மூளைக்கு இருக்கும் யூகம், கிரகிக்கும் சக்தி முதலியவை சென்னை மக்களுக்கும் இல்லாமலில்லை என்பதை மிஸ்டர் ரூதர் போர்டு மறந்துவிடக்கூடாது!

* * * *

மக்கள் பீதியடைவதைக் குறை கூறும் சர்க்கார், அவர்கள் பீதியைப் போக்க என்ன செய்திருக்கிறார்கள்; என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களென்பதைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை! இரண்டொரு விமானங்கள் சென்னையை வலம் வந்து, ரீங்காரம் செய்துவிடுவதால், ஜனங்கள் பீதி போய்விடுமா? அல்லது, ஏ. ஆர். பி. வீரர்கள் தெருத்தெருவாய் அலைந்து திரிவதால், மக்கள் பயம் தெளிந்து போகுமா? ஒருபோதும் தெளியாது! மக்கள் உயிரைப் பாதுகாக்கச் சர்க்கார் உருப்படியாக என்ன பந்தோபஸ்துச் செய்திருக்கிறார்களென்பதை அறிந்தால் தான் மக்கள் பயம் ஓரளவு தெளியும்; அது தெரியாத வரையில், பீதி அதிகரித்துக் கொண்டுதான் போகும். இதைச் சர்க்கார் இன்னமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், சென்னை கார்ப்பொரேஷன், மக்கள் பீதியை உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. கார்ப்பொரேஷனால் பெரிய பாதுகாப்புப் படைகளை ஏற்பாடு செய்ய முடியாது. ஒரு விமானப் படையையும் கொண்டுவர முடியாது; அல்லது எதிரி விமானங்களை எதிர்த்துச் சுட ஏராளமான விமான எதிர்ப்புப்பீரங்கிகளை வாங்க முடியாது. என்றாலும், கார்ப்பொரேஷன் சக்திக்குத் தகுந்த வரையில், சில ஏற்பாடுகள் செய்ய முன் வந்திருப்பது பாராட்டத் தக்கது!

* * * *

எதிரி விமானங்கள் சென்னையைத் தாக்கினல், சென்னையில் சுமார் 56,000 மக்கள் விமான ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள 84,000 அடி நீளத்தில் விமான பாதுகாப்புக் குழிகளைத் தோண்டவும், அதற்காகச் சுமார் 5 லக்ஷத்து 27 ஆயிரம் ரூபாய் செலவு செய்யவும் கார்ப்பொரேஷன் தீர்மானித்திருக்கிறது. இந்த ஏற்பாடுகள் செய்யவேண்டியது சர்க்கார்; அது சர்க்கார் கடமை. இதற்காகச் சர்க்காரே செலவு செய்யவும் வேண்டும். என்றாலும், கார்ப்பொரேஷன் இந்தச் செலவைச் சர்க்காரிடமிருந்து பெறத் தீர்மானித்திருப்பது ஒருவகையில் நல்ல யுக்திதான். ஆனல், விமானப் பாதுகாப்புக் குழிகளால் அதிகப் பலன் ஏற்படுமா, ஏற்படாதா என்பது அனுபவத்தில் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்; அதைப்பற்றி இப்பொழுது எதுவும் கூற முடியாது. இந்த 5 லக்ஷத்து 27 ஆயிரம் ரூபாயில் சுமார் $2\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் செலவில் பாதுகாப்புக் குழிகளை, பீபில்ஸ் பார்க்கில் தோண்டத் தீர்மானித்திருப்பதுதான் புத்திக்கு எட்டாத விஷயம்! பீபில்ஸ் பார்க்கில் விமானப் பாதுகாப்பு குழிகள் தோண்டவேண்டியதுதான். ஆனல், சுமார் 42,000 அடி நீளத்தில் அங்கு குழி தோண்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது? விமானப் படையெடுப்பு வந்தால், சென்னை மக்களில் பாதிப் பேர் பீபில்ஸ் பார்க்கை நோக்கி ஓடவேண்டுமென்பது கார்ப்பொரேஷன் அங்கத்தினர் கருத்தா? அல்லது, பீபில்ஸ் பார்க் மிருகக் காட்சியிலிருக்கும் துஷ்ட மிருகங்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்த "விசேஷ ஏற்பாடுகள்" செய்யக் கார்ப்பொரேஷன் தீர்மானித்திருக்கிறதா? இந்த ஏற்பாட்டின் "தமாஷ்" என்ன வென்பதுதான் புரியவில்லை! சென்னை நகரமெங்

(அடுத்த பக்கம் பார்க்க)

டம் - டம் குண்டு

முன் பக்கத்தொடர்ச்சி

# சீமைக்கா பார்சல்? - மண்டையில் மூளையுண்டு!

## வலம் வந்தால் போதுமா?

## பீபில்ஸ் பார்க் தமாஷ்!

## சாவுக்கு முன் குழி தோண்டுவதா?

கும்,ஒவ்வொரு வார்டுக்கும் அருகில், அந்த வார்டு மக்களைப் பாதுகாத்துக்கொள்ளக் குழிகளை வெட்டி வைத்தால் அதில் அர்த்தமுண்டு; அல்லது ஜன நெருக்கம் அதிகமாக இருக்கும் இடங்களில் அதிகக் குழிகளை வெட்டிவைத்தால் அதனால் நன்மையுண்டு, பலன் ஏற்படலாம். 2½ லக்ஷம் ரூபாய் செலவில் பீபில்ஸ் பார்க்கிலேயே பெரிய குழிகள் தோண்டி வைப்பதால் அதிக நன்மை ஏற்பட்டுவிடும் என்று சொல்ல முடியாது.

* * * *

விமானப் பாதுகாப்புக் குழிகளைப் பொது இடங்களில் வெட்டி வைப்பதால் மட்டும் பயனில்லை; ஒவ்வொரு வீடுகளிலும் இவ்வித குழிகளை வெட்டிவைக்க வேண்டியது அவசியமென்று சில அங்கத்தினர் அபிப்பிராயப்பட்டார்கள். அதனால், அதிக நன்மை ஏற்படுமா, அல்லது, அதிகக் கெடுதல் ஏற்படுமாவென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. இதை அனுபவத்தில்தான் தெரிந்துகொள்ள முடியும். இது சம்பந்தமாக நல்ல அனுபவம் பெறக் கார்ப்பொரேஷன் மேயர், கமிஷனர், அங்கத்தினர் முதலியோர், மலேயா, பர்மா, அல்லது, ரங்கூன், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குப் போய் நேரில் அனுபவம் பெற்றுத் திரும்பினால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன்! சர்க்கார் இதற்கு வசதி செய்து கொடுப்பார்களா? கார்ப்பொரேஷன் செய்யும் இந்த ஏற்பாடு, சாவதற்கு முன் குழி வெட்டி வைப்பதுபோலிருக்கிறது! எதிரி விமானங்கள் சென்னைக்கு வராமல் தடுக்க, யுத்த விமானங்களையும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் தயாராக வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யாமல், எதிரி விமானங்கள் வந்து குண்டு போட்டால், பதுங்கிக் கொள்ளக் குழி தோண்டி வைக்கத் திட்டம் போடுவது பித்துக்கொள்ளித்தனமேயாகும்! மக்கள் உயிரைப் பாதுகாக்கப் பாதுகாப்புக் குழிகள் வேண்டியதுதான்; ஆனால், எதிரி விமானங்கள் வரவிடாமல் தடுக்கவேண்டியது முதல் பாதுகாப்பு ஏற்பாடாகும். அதில் தான் அதிகக் கவனஞ் செலுத்தவேண்டும். அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி எதிரி வந்து குண்டு போட்டால், பாதுகாப்புக் குழிகள் பயன்படலாம். சாதாரணப் பாதுகாப்புக் குழிகள் எவ்வளவு தூரம் பயனளிக்குமென்று சொல்ல முடியாது. ஐரோப்பாவிலுள்ள யுத்த நாடுகளெல்லாம் கான்கிரீட் அரண்கள் கட்டியிருக்கின்றன. ஏழைப் பர்மா, மலேயா, இந்தியா போன்ற நாடுகளில்தான் கான்கிரீட் அரண்கள் இல்லை. அதை நினைப்பாருமில்லை! அவற்றைக் கண்ணால் பார்க்கக்கூட இந்நாட்டு மக்கள் கொடுத்து வைக்கவில்லை! ஏன்? அவை அடிமை நாடுகள்; அங்குள்ளவர் அடிமைகள்; கருப்பர்; அவர்கள் உயிர் என்ன அபூர்வமா? கருப்பருக்கு அவர்கள் உயிர் அபூர்வமாக இருக்கலாம்! மற்றவர்களுக்கு அதைப்பற்றி அக்கரை என்ன வந்தது?

* * * *

ஆபத்துக் காலங்களில் மக்களைப் பாதுகாக்கச் சர்க்கார் ராணுவங்களை வைத்திருக்கிறார்கள்; போலீஸ் படை இருக்கவே இருக்கிறது; போதாக்குறைக்குப் புதிதாக ஏ. ஆர். பி. படையையும் சர்க்கார் திரட்டி வைத்திருக்கிறார்கள். என்றாலும், இந்திய மக்களுக்கு வரவிருக்கும் ஆபத்தை நன்கு உணர்ந்து, மக்களைப் பாதுகாப்பதில் காங்கிரஸ் தலைவர்கள்தான் விசேஷ கவனஞ் செலுத்த முடியும். வார்தாத் தீர்மானம் இதற்குப் போதிய சான்றாகும். சர்க்காருடன் சமரசஞ் செய்துகொள்ளும் தீர்மானம் எப்படியோ இருக்கட்டும்; சர்க்கார் சமரசத்துக்கு வருவார்களோ, அல்லது, வராமல் இன்னமும் மூர்க்கப் பிடிவாதம் செய்வார்களோ, அதைப்பற்றிய கவலையே வேண்டாம்; வார்தா தீர்மானம் பற்றிய விவாதமும் வேண்டாம். காந்திஜி கேட்டுக்கொண்டதற்கிணங்க, காங்கிரஸ் நிர்மாணத்திட்டத்தில்தான் விசேஷ கவனஞ்செலுத்தவேண்டும். அந்த நிர்மாண திட்டத்தில் ஒரு பகுதி, மக்கள் பாதுகாப்பு. யுத்த அபாயம் ஏற்பட்டால், மக்களைப் பாதுகாப்பதற்கென, காங்கிரஸ் ஒரு பாதுகாப்புப் படையை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறது. இந்தப் பாதுகாப்புப் படை மக்கள் சேவையையே பெரிதாகக் கருத வேண்டும்; இந்தப் படையினர் சர்க்கார் ஸ்தாபனங்களுடன், அவசியமானால் ஒத்துழைக்கலாம். ஆனால், ஒத்துழைக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால், சர்க்கார் ஏற்பாடுகளுக்குக் குறுக்கே நிற்கக்கூடாது. ராணுவங்கள், போலீஸ் படைகள், ஏ. ஆர். பி. படைகள் சர்க்கார் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். காங்கிரஸ் பாதுகாப்புப்படையும் சர்க்கார் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டுமென்றிருந்தால், அந்தப் படையினர் உருப்படியான வேலை எதுவும் செய்யமுடியாது. ஆனால், நேர்மையான வழியில் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். போக்குவரத்தில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். திடீரென ஆபத்து வந்தால், போக்குவரத்துத் தான் ரொம்பத் தடைபடும். பெட்ரோல் பஞ்சத்தால், பெட்ரோலைக் கட்டுப்படுத்தச் சர்க்கார், ரயில் போகும் சில மார்க்கங்களில் பஸ்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தினர்; ஆபத்துக் காலத்தில் ரயில்வே போக்குவரத்துகள் சர்க்காருக்கு இன்றியமையாததாக இருக்கும். அந்தச் சமயத்தில் மக்கள் போக்குவரத்து சங்கடத்தில் வந்து முடியலாம். இதை நன்கு உணர்ந்து, இப்பொழுதே போக்குவரத்துக்கான சாதனங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

* * * *

யுத்தம் போகும் வேகத்தைப் பார்த்தால், இன்னம் இரண்டு மூன்று வருடங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியோ, அல்லது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியோ ஒழுங்காக நடைபெறாது என்பது நிச்சயம். அப்படியானால், வெளி நாடுகளிலிருந்து எதிர்பார்க்கும் சரக்குகளுக்குப் பஞ்சம் ஏற்படலாம். இதுவரையில் துணிக்கு இந்தியா பிறநாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. துணிக்குப் பஞ்சம் ஏற்படலாம். இந்திய மில்களில் கூடப் போதிய துணி ஸ்டாக்கில் இல்லை. ராஜன் பாபு கூறியதுபோல் சென்ற வருடத்தில் பெண் மக்களுக்கு அவர்கள் மானத்தை மறைத்துக் கொள்ளக்கூட இந்தியாவில் துணி இருந்ததில்லை! அவ்வித துணிப் பஞ்சம் இந்த யுத்தத்திலும் ஏற்படலாம். ஆகவே, கதர் அபிவிருத்தியில் காங்கிரஸ்காரர் விசேஷ கவனஞ் செலுத்த வேண்டுமென்று காங்கிரஸ் காரியதரிசி, ஆச்சாரியா கிருபாலனி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ஏற்கனவே, கைராட்டினத்தில் நூல் நூற்க ஏராளமான மக்கள் கற்றிருந்தால், இன்று இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் நூல் பஞ்சம் ஏற்பட்டிருக்குமா? நெசவாளர்கள் இவ்விதம் திண்டாடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இப்பொழுதாவது, கதர் அபிவிருத்தியில் இந்திய மக்கள் எல்லோரும் கவனஞ் செலுத்துவார்களாக. கதர் அபிவிருத்தியடையுமேயானால், சர்க்கார் கூடக் கதர் வாங்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிடும். அவ்வித நிலைமை ஏற்படப் போகிறதென்று காந்திஜி தீர்க்க தரிசனம் கூறியிருக்கிறார்! இந்தத் தீர்க்க தரிசனம் சர்க்காருக்கும், அதி

(அடுத்த பக்கம் பார்க்க)

ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன்
(மதராஸ்) லிமிடெட்.
நெ. 80 செம்புதாஸ் தெரு, :-: மதராஸ்.
தந்தி : "குட்வில்"
தபால் பெட்டி : நெ. 113. டெலிபோன் : 2724 & 3690
தலைமை ஆபீஸ்:—செட்டிநாடு.
பிராஞ்சு ஆபீஸ்கள்:
கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சி, பம்பாய்.
எங்களிடம் கட்டிடத்திற்கு வேண்டிய சகல விதமான இரும்பு சாமான், ஸிமிந்தி, வர்ணச் சாமான், எலெக்டிரிக் வயர், பல்பு, விசிறி, பம்பு செட், மோட்டார் முதலிய இதர சாமான்களும் சகாயமான விலைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.
*Sole Agents for:-*
"பிளட் விட்டா" - இரத்த விருத்தி, இரத்த சுத்தி டானிக்.
"விடா பிளேக்ஸ்" - உயர்தரமான கோதுமை அவல்.
"விடா ரஸ்க்" - உயர்தரமான ரோட்டி.
"ஆஸ்க்யூ" - மரச் சாமான்களை கரையான்,மண், செல்லு, அரிக்காமல் பாதுகாக்கும் ரசாயனப் பொருள்.
"கல்பகா" - உங்களுடைய துணிகளை "தும்பைப் பூ" மாதிரி வெண்மை செய்யும் கொழுப்பு கலப்பற்ற உயர்தரமான வாஷிங் சோப்.
விவரங்களுக்கு எழுதவும்.
பிராடியூஸ் டிபார்ட்டுமெண்டு
207, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
டெலிபோன் நெ. 2991.
சகல விதமான மளிகை சாமான்களும், குடம், சணல் முதலியவைகளும் மொத்தமாய் சகாய விலைக்குக் கிடைக்கும்.

காரா வர்க்கத்துக்கும் அலட்சியமாக இருக்கலாம்; ஆனல், காந்திஜியின் தீர்க்க தரிசனம் நிறைவேறப் போவது நிச்சயம்!

* * * *

அதிகார வர்க்கத்துக்குத்தான் இவ்வித திமிர் பிறவிக் குணமென்று நினைத்துவிடவேண்டாம்! இந்தியாவுக்கு வரும் ஒவ்வொரு வெள்ளையருக்கும் இந்தத் திமிர் உண்டு. இந்தியாவில் கால் எடுத்து வைத்ததுமே நிறத் திமிர் அவர்கள் கண்ணை மறைத்துவிடுகிறது! ஒவ்வொரு வெள்ளையரும், தெய்வலோகப் பிறவி என்று இறுமாப்புக்கொள்ளுகிறார்கள்! இதற்கு இந்தியரின் உப்பும், தண்ணீருந்தான் காரணமோ, என்னமோ நிச்சயமாகச் சொல்ல முடியாது! வழியே போகிற வெள்ளையனுக்கு, எதிரே வரும் கருப்பனைக் கண்டால் வெறுப்பு; அலட்சியம். ரயிலில் போகிற ஒரு வெள்ளையன் இருக்குமிடத்தில், ஒரு இந்தியன் போய் உட்கார்ந்தால், வெள்ளையனுக்கு வருகிற கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல! ரயில் வண்டியே வெள்ளையன் வீட்டுச் சொத்து; இந்தியன் ஏதோ யாசகத்துக்கு ஏறுவது போல் நினைத்துக்கொள்ளுகிறான்! சில சமயங்களில் இந்தியனை இம்சிக்கவும், வண்டியிலிருந்து தள்ளிவிடவும் துணிந்துவிடுகிறான். இவ்வித சம்பவமொன்று, சமீபத்தில் நாகபுரி ரயில்வே ஸ்டேஷனில் நடந்தது. இந்தியன் எவ்வளவு பெரிய உத்தியோகஸ்தனாக இருந்தாலுஞ் சரி; அல்லது, எவ்வளவு பணமும் செல்வாக்கும் பெற்றிருந்தாலுஞ் சரி, ஒரு சாதாரண வெள்ளைக் "கடவுளுக்கு" முன் அவன் தூசிக்குச் சமமென்றே பொதுவாக வெள்ளையர் நினைத்துக்கொள்ளுகிறார்கள்!

* * * *

நாகபுரி ரயில்வே ஸ்டேஷனில், இரண்டாவது வகுப்பு வண்டியில் ஒரு வெள்ளையர் உட்கார்ந்திருந்தார். அதில் நிறைய இடமிருந்தது; ஆகவே, மத்திய மாகாண சர்க்காரின் பிரதம காரியதரிசியாகிய திருவேதியின் குமாரர் அந்த வண்டியில் ஏறப்போனார்; அவரை வழியனுப்ப திருவேதியும், அவர் மனைவியாரும் வந்திருந்தார்கள். திருவேதி வந்திருந்தும், அவர் மகனை அந்த வண்டியில் ஏற வெள்ளையர் அனுமதிக்கவில்லை. ஆவேசம் பொங்கி கூச்சலிட்டார்! திருவேதி யார் என்பதை அந்த வெள்ளையருக்கு எடுத்துக் கூறியும், அவர் மண்டையில் நியாயம் ஏறவே இல்லை! வெள்ளை நிறத் திமிர் அவ்வளவுக்கு மண்டையில் ஏறி இருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் வண்டி புறப்படுவதுகூடத் தாமதமாயிற்று. உடனே அங்குள்ள ரயில்வே போலீசார், அந்த வெள்ளையரை ரயில்வே சட்டத்தின் 109வது செக்ஷன்படி கைதுசெய்ய வந்தார்கள். அப்பொழுதுதான் வெள்ளையருக்குப் புத்தி வந்தது. அப்பொழுதுகூட சரியான புத்தி வரவில்லை! வண்டி குறிப்பிட்ட சமயத்தில் புறப்படத் தடையாக இருந்ததற்கு மன்னிக்கும்படி திருவேதியைக் கேட்டுக் கொண்டார்; திருவேதி அந்த வெள்ளையரைச் சம்மானிட்டாரா? இல்லை; வண்டியைத் தாமதப்படுத்தியது

# டம்-டம் குண்டு

## உப்பும், தண்ணீரும் காரணமோ!
## வெள்ளையன் சொத்தா?
## என்ன குட்டுப் பட்டாலும்?
## கோடி குவித்து என்ன?
## சும்மா போய்த் தொலையக் கூடாதா?
## மூளை விசித்திரம்!
## பிரிட்டிஷாருக்கு "ரிப்போர்ட்"!

குற்றமென்றாலும், அவருடைய நிறத் திமிரும், வக்ர புத்தியுந்தான் மன்னிக்க முடியாத குற்றம்! 'இந்த ரயில் வண்டி எங்களுடையது, இந்தத் தேசம் எங்களுடையது! இது எப்பொழுதும் ஞாபகமிருக்கட்டும்!" என்றார். வெள்ளையர் நிறத் திமிரை உணர்ந்து, மீண்டும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்; வண்டி புறப்பட்டது.

* * * *

இது போன்ற சம்பவங்கள் பல ரயில் வண்டிகளில் நடந்திருக்கின்றன. ஒரு தமிழர், சென்னை ஹைக்கோர்ட் நீதிபதியாக இருந்தவர்கூட ஒரு வெள்ளையனால் அவமதிக்கப்பட்ட வேறொரு சம்பவம் என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த நீதிபதி சாதாரண உடையில் முதல் வகுப்பு வண்டியில் ஏறினார். அந்த வண்டியில் எருமை மாடு போல் படுத்திருந்த வெள்ளையன், தமிழரைக் கண்டதும், திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். ஆனல், அவர் உட்கார வசதியாக இடங் கொடுக்காமல் மீண்டும் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டான்! நீதிபதி ஓரிடத்தில் உட்கார்ந்தார்; இரவு நேரத்தில் சோர்ந்து தூங்கினார். அந்தச் சமயம் பார்த்து வெள்ளையன் அவன் வெறுப்பையும், வஞ்சத்தையும் தீர்த்துக் கொள்ள, நீதிபதி அணிந்திருந்த செருப்பை திருடி வெளியில் எறிந்துவிட்டான்! நீதிபதி அவ்வளவுக்கு ஏமாந்தவர் அல்ல; செருப்பு எங்கே போனது என்பது அவருக்குத் தெரியும்; அவரும் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார். வெள்ளையன் தூங்கும் சமயத்தில், அவன் கழற்றி வைத்திருந்த கோட்டை யெடுத்து வெளியில் எறிந்தார்! குறிப்பிட்ட ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. வெள்ளையன் அவசரம் அவசரமாக வண்டியிலிருந்து இறங்கப் போனான்; கோட்டைக் காணவில்லை. "என்னுடைய கோட் எங்கே?" என்று கேட்டான் நீதிபதி உடனே, "உன் கோட் என் செருப்பைக் கொண்டு வரப் போயிருக்கிறது!" என்றார் வெள்ளையன் வெட்கித் தலை குனிந்தான். இதற்குள் நீதிபதியைத் தேடிப் பெரிய உத்தியோகஸ்தர்கள் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். அவர்களைக் கண்டதும், வெள்ளையனின் முகம் இன்னமும் வெளுத்தது. அவன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இது போன்ற வேடிக்கை சம்பவங்கள் பல உண்டு; ஆனல், இந்தியரிடம் என்னதான் குட்டுப்பட்டாலும் வெள்ளையர் நிறத் திமிர் அவர்களை விட்டு ஒழிந்தபாடில்லை!

* * * *

வெள்ளையருக்குத்தான் இந்த நிறத் திமிர் என்றால், வெள்ளையருடன் சேர்ந்த, யூதர்களையும், அரை குறையான ஆங்கிலோ-இந்தியர்களையுங் கூட எப்படியோ இந்த நிறத் திமிர் ஒட்டிவிடுகிறது இதற்குப் பல சம்பவங்களை உதாரணமாகக்கூறலாம் சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைமட்டும் கூறுகிறேன். "பருத்தி மன்னர்" என்று சொல்லக்கூடிய பம்பாய் மில் முதலாளி, சர். விக்டர் சாஸூன் ஒரு யூதர்; ஆனல், அவரும் ஒரு வெள்ளையர் என்பது அவர் நினைப்பு! பாக்பாடிலிருக்காது சுமார் 200 வருடங்களுக்குமுன் அவர் மூதாதைகள் இந்தியாவுக்குப் பிழைக்க வந்தார்கள்; என்றாலும், அவருக்கு இந்தியாமீது அனுதாபம் ஏற்படவில்லை. இந்தியாவில் கோடி கோடியாகத் தேடிக் குவித்தார்! அந்தப் பணமெல்லாம் இந்தியரிடமிருந்து திரட்டியது என்பதை மறந்தார்! அவர் சமீபத்தில்தான் அமெரிக்காவுக்குக் கிளம்பினார்; போகிறவர் சும்மா போய்த் தொலையக் கூடாதா? இந்தியர் தலையில் ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போனார்! "யுத்த காலத்தில் இந்திய மந்திரியின் அதிகாரங்களையெல்லாம் வைசிராய்க்குக் கொடுத்து, வைசிராயை இந்தியாவில் ஒரு சர்வாதிகாரியாக்கவேண்டும்; இன்றேல், தாய்லந்தில் நடந்தது போலவே இந்தியாவிலும் நடக்கலாம்!" என்றார். அதாவது, தாய்லந்து ஜப்பானுடன் சேர்ந்து கொண்டதுபோல், இந்தியாவும் எதிரிகளுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று ஒரு விசித்திரமான யோசனை சொல்லிவிட்டுப் புறப்பட்டார்!

சர். சாஸூன் அமெரிக்காவுக்குத்தான் போயிருக்கிறார்; அங்கு மூளை நிபுணர்கள் பலர் இருப்பதாகக் கேள்வி! ஆகவே, அவர் மூளையை அமெரிக்காவிலுள்ள நிபுணர் பரிசோதித்து, அவர் மூளையின் விசித்திரம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ளுவார்களென்று நினைக்கிறேன்! அந்தப் பொறுப்பு அமெரிக்க நிபுணரைச் சேர்ந்தது. ஆனல் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில், சர். சாஸூன் நன்றியற்றவரென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவின் அரசியல் நிலைமையையோ, இந்தியரின் நல்லெண்ணத்தையோ அவர் சரியாக அறிந்துகொள்ளவில்லை. இந்தியாவில் பல வருடங்கள் இருந்தும், அவர் பணம் குவிக்கும் ஒரே வேலையில் ஈடுபட்டிருந்திருக்கிறாரே யொழிய, இந்தியாவின் நிலைமையையோ, இந்தியரின் எண்ணத்தையோ அறிந்து கொள்ளும் நிலைமையில் அவர் இருக்கவில்லை; இன்றேல், அவர் இவ்வித அபவாதத்தை ஒருபோதும் வெளியிட்டிருக்கமாட்டார். ஒருவேளை அவர் மனக் குழப்பம் இந்த அபவாதத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம். இந்தியாவில் கொள்ளையடித்தது போல், ஹாங்காங்கிலும், ஷாங்காயிலும் கொள்ளையடிக்க அங்கும் மில்களை ஏற்படுத்தினார். அந்த மில்கள் இன்று என்ன கதியடைந்திருக்குமென்று சொல்லவேண்டியதே இல்லை. இந்த மனக் குழப்பம் அவர் கூறிய அபவாதத்துக்கு மற்றொரு காரணமாக இருக்கலாம்! அப்படியானல், அமெரிக்க மூளை நிபுணர்களின் கடமை இருமடங்காகிறது! சர். சாஸூன் மூளையைக் கட்டாயம் பரிசோதித்துப் பார்த்து, பிரிட்டிஷாருக்கு "ரிப்போர்ட்" சமர்ப்பிக்கவேண்டும்! ஏன்? அமெரிக்கா, பிரிட்டனுடன் சேர்ந்திருக்கும் நேச நாடுகளில் ஒன்று; சர். சாஸூன் அபிப்ராயத்தைக் கேட்டு, பிரிட்டிஷார் இந்தியா விஷயத்தில் தவறான வழியில் போகாமல் தடுக்கவேண்டியது அமெரிக்க மூளை நிபுணர்களின் கடமையல்லவா?


## சக்தி அப்ரேக்

### நீர் ரோக சஞ்சீவி

அதிக மூத்திரம், நீரில் சர்க்கரை, ஊவரட்சி முதலியவைகளை 20 நாளில் பூர்ண சௌக்கியப்படுத்தும்.

விவரங்களுக்கு:

சக்தி நிலையம்,

முனிசிபல் ஆபீஸ் எதிரில், காரைக்குடி



சூளை கண் ஆஸ்பத்திரி [ஸ்தாபிதம் 1935] (கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்)

**டாக்டர் எடுக்கச் சொல்லுகிற கண் எடுக்காமல் குணமாகும்.**

கண் ஆச்சரிய பார்வை வரும் ஆப்ரேஷனில்லாமலே பூ, புரை, மேகநீர், உள்பூ, புரை கரைந்து அடியில் கண்ட பார்வை வரும்.

கால் குருடு $1\frac{1}{2}$ அடியில் படிக்கும் கண் $2\frac{1}{2}$ அடிக்குள் கண்ணாடி யில்லாமல் படிக்க மருந்து விலை ரூ. 10-8-0 அரை குருடு 1-அடி 2-அடியில் படிக்க மருந்து விலை ரூ. 21-0-0 முக்கால் குருடு $\frac{1}{4}$ $\frac{1}{2}$ அடி அதை 2 அடிவரை படிக்க மருந்து விலை ரூ. 31-8-0 நேரில் சிகிச்சை செய்ய ரூ. 60-0-0 குணமில்லையானால் பணம் வாபீஸ்; உத்திரவாத சீட்டுக்கு ரூ. 100-0-0. (முழுக்குருடு எழுத்து படிக்க முடியாத கண் ஆப்ரேஷனல் மறைந்த கண், டாக்டர் மேக நீர் கண் முடியாது என்று கைவிட்டது நேரில் பார்த்து குணமாக்குவோம்.)

**No. 8. M. சூளை ஐரோடு, சென்னை.**

அங்கும்-இங்கும்

# வீடு எரிகிறது!-சுருட்டுக்கு நெருப்பு!

## துரும்பைப் பிடித்துத் தொங்குவதேன்?

## வாலேமடக்க வழி!

## பாய்ந்தால் பஸ்பந்தான்!

வீடு தீப்பற்றி எரியும்போது, ஒருவன் சுருட்டுப் பிடிக்க நெருப்புக்கேட்டானும்! உலகமெங்கும் யுத்தத் தீ வேகமாகப் பரவி வருகிறது; இந்தச் சமயத்தில் பிரிட்டிஷாரோ, பழைய கதை பேசிக் காலங்கடத்திக்கொண்டு வருகிறுர்கள்! சர்ச்சில் அமெரிக்காவுக்குப் பறந்தார்; அங்கிருந்து பத்திரமாக வந்து சேர்ந்தார். அவர் பறந்து வந்த வேகத்தையும், அவரே விமானத்தைச் சிறிது நேரம் ஓட்டிச் சென்றதையும், இங்கிலாந்து வந்து சேர்ந்தபின், அவரை அவர் இனத்தினர் ஆடம்பரமாக வரவேற்றதையும், சர்ச்சிலே அவருடைய மனைவியார் ஆவலோடு பலமுறை முத்தமிட்டதையும், அழகாக வர்ணிப்பதில் பத்தி பத்தியாகச் செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கிறுர்கள்! சர்ச்சில் மனைவியார் முத்தமிட்டால் யாருக்கு என்ன? அது யுத்த வேகத்தைத் தடுத்துவிடுமா? இல்லை. சர்ச்சில் அமெரிக்காவுக்குப் போய் என்ன சாதித்தாரென்பதை அறியவே மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். அதைப்பற்றி ஒன்றையும் காணேம்! ஏதோ நேச நாடுகள் தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாக மட்டும் சொல்லுகிறுர்கள். அச்சு நாடுகள் தீவிரமாக வேலை செய்து, இன்னமும் கடுமையான நடவடிக்கை எடுக்கத் திட்டம் போட்டு, ஒப்பந்தஞ் செய்திருக்கும்போது, நேச நாடுகளின் தலைவர்கள் கூடுவதும், குடிப்பதும், உண்ணுவதும், யோசனை போடுவதும், பேசுவதுமாக இருந்தால், யுத்தத்தை ஜெயித்துவிடுவார்களா?

ஃ ஃ ஃ

ஜப்பான் முதன் மந்திரி டோஜோ, ஜப்பானியர் நோக்கம் நிறைவேறும் வரையில், ஆயுதத்தை கீழேவைக்கப் போவதில்லையென்று ஜம்பம் பேசுகிறுர்! அச்சு நாடுகளைப் பலப்படுத்த போவதாகவும் மார்தட்டுகிறுர்! ஹிட்லரே ரஷியா போர்முனைக்குப் போய் யுத்தத்தை நடத்தி வருகிறுர்; ஹிட்லரின் சகுனி மாமா வான் ரிப்பன்டிராப், ஐரோப்பாவெங்கும் சுற்றி திரிந்து, ஜெர்மனியின் காலின் கீழ் மிதிபட்டுக் கிடக்கும் நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கப் போகிறுர்; அவர் துருக்கிக்குக்கூடப் பறந்து போகப் போவதாகக் கேள்வி. விச்சி பிரான்சுடனும்,ஸ்பெய்னுடன் நாஜியர் அந்தரங்க பேச்சு நடத்திவருகிறுர்கள். நாஜியரின் இந்த ரகசிய நடவடிக்கைகளெல்லாம் ஐரோப்பாவில் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கேயாகும். பிரிட்டனைத் தாக்குவதற்கும், மத்தியதரக் கடலில் பிரிட்டனுக்கு முட்டுக்கட்டை போடுவதற்குமே இந்த ஏற்பாடுகள். குளிர் காலம் முடிந்ததும், பிரிட்டனைத் தாக்குவதற்கு, இப்பொழுதே மும்முரமான நடவடிக்கை எடுத்து வருகின்றனர்; அதற்காக எந்தத் தேசங்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டுமோ, அந்த நாடுகளின் ஒத்துழைப்பையும், உதவியையும் பெற தந்திரமாக வேலைசெய்து வருகின்றனர்!

ஃ ஃ ஃ

இந்தச் சமயத்தில் நேச நாடுகள், தங்கள் நாடுகளின்மீது கவனமாக இருக்கின்றனவே யொழிய, எதிரியை முறியடிக்க ஒரு சரியான வழியைப் பின்பற்றக் காணேம்! கிழக்கே ஜப்பான் வெற்றி பெற்று வருகிறது; அதன் வெற்றியின் வேகம், ஜெர்மன் வெற்றியைக்கூடத் தோற்கடித்துவிடும் போலும்! ஜப்பானைக் கேவலமாக மதித்த காலம் மறைந்துவிட்டது! இன்று, நாஜி ஜெர்மனிக்குக்கூட ஜப்பான் பாடம் கற்றுக்கொடுக்கக் கூடிய நிலைமையிலிருக்கிறது. சீனவில், ஜப்பான் யுத்தம் ஆரம்பித்து ஆறு வருடங்களாகின்றன; இந்த ஆறுவருடயுத்தத்தில், ஜப்பான் போர்த் திறமை வெளியாகவில்லை. ஆனல், பாஸிபிக் யுத்தம் ஜப்பானின் போர்த் திறமையை நன்கு நிரூபித்து விட்டது! பெரிய வல்லரசுகளாகிய அமெரிக்காவையும், பிரிட்டனையும் ஜப்பான் தனிமையாகத் துணிந்து சண்டைக்கு இழுத்திருக்கிறது; சண்டைக்கு இழுத்ததோடு மட்டுமல்ல, இன்று பாஸிபிக்கில் ஜப்பானே வெற்றி பெற்று விளங்குகிறது. இப்பொழுதே ஜப்பானை மடக்காமல் விட்டுவிட்டால், கிழக்கே அதி சீக்கிரத்தில் வெற்றி பெற்று பாஸிபிக்கிலும், இந்து மகா சமுத்திரத்திலும், விசேஷமாக வங்காளக் குடாக் கடலிலும், அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டி விடுமென்பது நிச்சயம்.

ஃ ஃ ஃ

இன்று ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் நடந்து வரும் யுத்தங்களின் நிலைமையைக் கவனித்தால், ஐரோப்பா யுத்தம் அவ்வளவு முக்கியமல்ல வென்றே சொல்லலாம். ரஷிய, சீன, பர்மா, மலேயா, எகிப்து முதலிய இடங்களில் நடந்து வரும் யுத்தங்களே ரொம்ப முக்கியமாகும். யுத்த முடிவும் இந்த யுத்தங்களையே பொறுத்திருக்கிறது. ஐரோப்பா யுத்தம், ரஷியா கையிலிருக்கிறது. ஜப்பான் யுத்தம் சீனவைப் பொறுத்திருக்கிறது. ரஷியாவில் ஹிட்லர் மட்டும் வெற்றி பெற்றிருந்தால், இன்று ஐரோப்பா, ஏன், அமெரிக்கா, ஆசியா முதலிய நாடுகளின் கதி எப்படி இருக்கும்? அவ்வித நிலைமை ஏற்படாமல் தடுத்தது ரஷியா; ரஷியாவின் சிநேகிதோஷ்ண நிலைமை யுத்தத்தின் போக்கை அடியோடு மாற்றிவிட்டது. ரஷியரின் வீரம் நாஜி ஜெர்மனியரின் வேகத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது. இன்று ரஷியாவில் ஜெர்மனியர் திண்டாடுவதற்கு, ரஷியர்தான் காரணம். அங்கிருந்து ஜெர்மன் ராணுவங்கள் பின்வாங்கி வருவதற்கு ரஷியர் வீரமே காரணம். இன்று உலக மக்கள் ஓரளவு நிம்மதியாக இருப்பார்களேயானல், அதற்கும் ரஷியாதான் காரணம். ஆனல், இதே ரஷியாவைத்தான் பிரிட்டிஷார் ஆதியில் அலட்சியஞ் செய்தனர். சிறு துரும்பும், பற்குத்த உதவும் என்பதை அப்பொழுது மறந்துவிட்டனர்! இன்று, அந்தத் துரும்பைப் பிடித்துத் தொங்குகின்றனர்!

ஃ ஃ ஃ

ஐரோப்பாவில் மட்டுமல்ல; பாஸிபிக்கிலும் ரஷியர் தலையிட்டிருப்பார்களேயானல், ஜப்பானின் வாலை மடக்க வழி ஏற்பட்டிருக்கும்! ஆனல், ரஷியா இன்று அந்த நிலைமையில் இல்லை. ஐரோப்பாவில் ரஷியர் சுமார் 1,700 மைல் நீளமுள்ள போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது. ஜப்பானைவிடக் கொடிய நாஜியரை ரஷியர் இரவு பகலாக எதிர்த்து வரவேண்டும். சுமார் 6 மாதத்துக்குள் ஜெர்மனியர் 600 மைல் ரஷியாவுக்குள் முன்னேறி வந்தனர். அவர்களை மீண்டும் அவ்வளவு தூரத்தில் வெருட்டியடித்தாலொழிய ரஷியா, ஜப்பான் மீது கண்ணேட்டம் வைக்க முடியாது. நாஜியரை வெருட்டியடித்துவிட்டால், ஜப்பான் தீவுகளை, ரஷியா வெகு சுலபத்தில் நசுக்கிவிட முடியும்! ரஷியாவிலிருந்து ஜப்பான் தீவுகள் சுமார் 200 மைல் தூரத்தில்தான் இருக்கின்றன. ரஷிய விமானங்கள் நினைத்தால், ஜப்பான் தீவுகள்மீது பாய்ந்து, அவற்றைப் பஸ்பமாக்கிவிட முடியும்! ஆனல், ஜெர்மன் பூச்சியின் தொல்லையை ஒழிக்காமல், ரஷியா, ஜப்பான் கொசு மீது கவனம் செலுத்த முடியாது! ரஷியாவில் ஜெர்மன் ராணுவங்கள் லெனின்கிராடை முற்றுகை போட்டன; அந்த முற்றுகை தளர்ந்து வருகிறது. லெனின்கிராடுக்கு இனிமேல் ஆபத்தில்லை; மாஸ்கோவுக்கும், லெனின்கிராடுக்கும் போக்குவரத்து ஏற்பட்டுவிட்டது. லெனின்கிராடைவிட மாஸ்கோ தான் ரொம்ப ஆபத்தான நிலைமையில் இருந்தது. மாஸ்கோவுக்குச் சுமார் 22 மைல் தூரத்தில் ஜெர்மன் ராணுவங்கள் வந்திருந்தன. அந்த ராணுவங்களைச் சுமார் 60 மைல் தூரம் வெருட்டியடித்து, மெஜாய்ஸ்க் என்னும் நகரை ரஷியர் கைப்பற்றிக் கொண்டனர். மெஜாய்ஸ்க் முக்கியமான இடம். இங்குதான் ஜெர்மனியர் நல்ல ராணுவ ஏற்பாடு செய்திருந்தார்கள். மெஜாய்ஸ்க்கு வடக்கிலும், தெற்கிலும் ஜெர்மன் ராணுவங்கள் பின்வாங்கிய போதிலும், மெஜாய்ஸ்க் நகரைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். இங்கு ஜெர்மனியருக்குத் தோல்வி கிடைக்கக்கூடுமென்பதை அறிந்து, ஹிட்லரே போர்முனைக்குச் சென்று, போராட்டத்தை நடத்தினர். நல்ல தேர்ச்சிபெற்ற சுமார் ஒரு லக்ஷம் ஜெர்மன் துருப்புகளை விமான மார்க்கமாகக் கொண்டுவந்து போராட்டத்தைத் தீவிரமாக நடத்தினர். ரஷியர் இளைத்தார்களா? இல்லை; நகரத்தினுள் புகுந்து, தெருத் தெருவாய், வீதி வீதியாய், வீடு வீடாகப் போராடினர். மெஜாய்ஸ்க் நகரமே தீ மயமாயிற்று! என்றுலும், ரஷியர் கொஞ்சமும் பின் வாங்காமல் போராடி, ஜெர்மனியரை அங்கிருந்து வெருட்டினர். ஜெர்மனியர் தோல்வியடைந்து ஓடவேண்டியதாயிற்று. இது ரஷியருக்குப் பெரிய வெற்றி; ஆனல், இதனல் ஜெர்மனியர் தோல்வி யடைந்தனரென்று சொல்லமுடியாது.

ஃ ஃ ஃ

ஜெர்மனியரை ரஷியர் அடியோடு முறியடித்து விட்டார்களென்றே, அல்லது ஜெர்மன் ராணுவ பலம் குறைந்து விட்டதென்றே சொல்ல முடியாது. மெஜாய்ஸ்க் வெற்றி, ஜெர்மனியருக்கு ஒரு கொசுக்கடி! அவ்வளவுதான்; வார்ஸாவிலிருந்து 600 மைல் முன்னேறி வந்திருக்கும் ஜெர்மன் ராணுவங்களை, சுமார் 60 மைல் தூரம் வெருட்டியடிக்க ரஷியர் மாதக்கணக்கில் போராடவேண்டியதாயிற்று. இதிலிருந்து, ஜெர்மன் ராணுவ பலத்தை நன்கு அறிந்து கொள்ளலாம். இன்னம் 600 மைல் வரையில் ஜெர்மன் ராணுவங்களை வெருட்டியடிக்காதவரையில், ரஷியர் நிம்மதியாக இருக்க முடியாது; அவ்வாறு ஜெர்மனியரை வெருட்டியடிக்க இன்னமும் எவ்வளவு காலமாகுமோ யார் கண்டது? அதுவரையில் ரஷியா வேறு போராட்டத்தில் இறங்கமுடியாது. ஜப்பான் போராட்

(அடுத்த பக்கம் பார்க்க)


## பாக்கெட் பிரஸ்

உங்களுடைய கடிதங்கள், ப்ரோக்ராம், அழைப்புக் கடிதங்கள், மற்றும் அச்சிட வேண்டியவை எல்லாவற்றையும் உங்கள் வீட்டிலேயே அச்சிட்டுக் கொள்ளலாம். வெகு சுலபமான வழி, விலை ரூ, 1-4-0.

நெ. 2 ரூ. 1-12-0. தபால் சார்ஜ் அணு 10.

THE AMERICAN COMMERCIAL STORES,
P B 12213 Calcutta (T M)

அங்கும்-இங்கும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

# ஜெர்மன் பூச்சி!-குரங்குப் பிடி!

## இன்னமுமா மூளைக் குழப்பம்?

## அழுதாலும் பிள்ளை :: :: அவளே பெற வேண்டும்!

## சிதம்பர ரகசியந்தான்!

## நேற்று முளைத்த ஜப்பான்!

டத்தில் ரஷியா கவனஞ் செலுத்தாம லிருப்பதற்கு இதுதான் காரணம். ரஷியா என்ன செய்யும்? ரஷியாவுக்கு வேறு எந்த நேச தேசமும் உதவிக்கு வரவில்லை. ரஷியாவுக்கு மற்ற நேச தேசங்கள் போதிய உதவிச் செய்து, நாஜி ஜெர்மனியை முறியடிக்க வழி செய்திருக்குமேயானால், இதற்குள் ரஷியா, ஜப்பான் விஷயத்தில் கவனஞ் செலுத்தியிருக்கும். ரஷியா ஜெர்மனியை எதிர்த்துப் போராடும் இந்தச் சமயத்தில், ஜெர்மனியைப் பின்னாலிருந்து தாக்கப் பிரிட்டனுக்கோ, அமெரிக்காவுக்கோ தைரியமில்லை. இது ஆபத்து என்று சிலர் ஓரே ஓலமிடுகிறார்கள்; ஜெர்மனியைத் தாக்க வேண்டியது தானென்று சிலர் மீசை முறுக்குகிறார்கள்! தாக்குவதா, இல்லையா யென்று வேறு சில பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இன்னமும் மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்! இந்த நிலைமையில், ரஷியாவுக்கு நேச தேசங்கள் எப்படி உதவிக்கு வர முடியும்? ஆகவே, ரஷியா தனிமையாக ஜெர்மனியை எதிர்த்துப்போராடிக் கொண்டிருக்கிறது. அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற வேண்டும்!

ஃ ஃ ஃ

யுத்தத்தை வெற்றிகரமாகவும், துரிதமாகவும் முடிக்கப் பிரிட்டனோ, அமெரிக்காவோ நினைக்குமேயானால், ஜெர்மனியை நாலா பக்கமும் எதிர்க்க வேண்டும்; அதற்கோ தைரியமில்லை! தைரியமில்லாமல், வெறும் வீரப் பேசி என்ன பயன்? தைரியமில்லையோ, அல்லது, ஒரு பெரிய யுத்தத்துக்குத் தயாராகத்தான் இல்லையோ, அதுகூட சிதம்பர ரகசியமாகவே இருக்கிறது! யுத்தம் ஆரம்பித்துச் சுமார் $2\frac{1}{2}$ வருடங்களாகியும், இன்னமும் நேச நாடுகள் ஜெர்மனியை எதிர்க்கத் தயாராக இல்லையென்றால், அது விசித்திரமல்லவா? நேச நாடுகளின் யுத்த முயற்சி எவ்வளவு தீவிரமாக இருக்கிறதென்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்! நேற்று முளைத்த ஜப்பான், என்ன வேகமாக போகிறது! அந்த ஜப்பான் கொட்டத்தை அடக்கக்கூட நேச நாடுகளுக்குத் தைரியமில்லை யென்றால், ஜெர்மனி போன்ற இரும்புத் தலை நாஜியரை அவ்வளவு இலகுவில் எதிர்த்துத் தோற்கடித்து விட முடியுமா? நேச நாடுகள் யுத்தத்தை ஒத்தி போட்டு, காலங் கடத்திக்கொண்டு போவதற்கு இதுதான் காரணமாக இருக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

மத்திய அரங்கமாகிய மாஸ்கோ போர் முனையில் ரஷியாவுக்கு வெற்றி கிடைத்தது மட்டுமல்ல; ஸ்மலென்ஸ்க், நீலா முனைகளிலும் ரஷியர் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். அங்கு ஜெர்மனியர் இன்னமும் பின்வாங்கிப் போகவேண்டியதாயிற்று. ஹிட்லர் ஜெர்மன் படைகளுக்கு ஏக தளகர்த்தராக வந்தபின், ஜெர்மன் ராணுவங்கள் பின்வாங்கிப் போவது விந்தையாக இருக்கலாம்! ஹிட்லர் தளகர்த்தராக வந்துவிட்டதால், ரஷியர் வீரம் குன்றிவிடுமா, அல்லது, ரஷியாவின் இயற்கை அவருக்குத் தலை சாய்த்துவிடுமா? ஜெர்மன் ராணுவங்கள் கொஞ்சம் மூர்க்கத்தனமாகப் போராடியிருக்கலாம்; அவ்வளவுதான். ஆனால், அவர்கள் மூர்க்கத்தனம்கூடக் குறைந்துவிட்டது. ராஸ்டாவ், கெர்ச் முதலிய முக்கியமான போர் முனைகளிலும் ஜெர்மனியர் தோல்வியடைந்தனர். பல ஜெர்மன் ராணுவ ஜெனரல்கள் கூட நோய் வாய்ப்பட்டிருக்கின்றனர். ரஷியப் போர் முனையிலுள்ள ஜெர்மன் சோல்ஜர்கள் "டைப்பாய்ட்" ஜுரத்தால் அவதிப்படுகின்றனரென்று ஈடன் சொல்லுகிறார். இதற்கெல்லாம் காரணம், ரஷியக் குளிரும், பனியுந்தான். இதனால் ஜெர்மனியர் குறிவைத்துச் சென்ற காகாஸஸ் பிரதேசத்துக்குள் பிரவேசிக்க முடியாது போயிற்று. வேறு வழி பாகவும் பிரவேசிக்க மார்க்கமில்லை. ஓரே வழி துருக்கிதான்; அதனால்தான் துருக்கிமீது ஜெர்மனியர் கண் வைத்திருக்கிறார்கள். துருக்கிக்கு வான் ரிப்பன்டிராப் பறந்துபோகப் "பிளான்" போட்டிருப்பதும் இதற்காகத்தானிருக்கலாம்!

ஃ ஃ ஃ

மத்தியதரக் கடலில் ஜெர்மனியர் திருஷ்டி பாய்ந்திருப்பதற்கும் இதுதான் காரணம். மத்தியதரக் கடலில் ஜெர்மன் சப்மரைன்களும், யுத்தக் கப்பல்களும் சுறு சுறுப்பாக இருக்கின்றன. லிபியாவுக்கு ஏராளமான ஜெர்மன், இதாலி ராணுவங்களும் யுத்த தளவாடங்களும் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்கள் யுத்த முயற்சியை மறைக்கவும், மத்தியதரக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கடற்படையின் கவனத்தை இழுக்கவுமே மால்டா தீவை ஜெர்மன், இதாலி விமானங்கள் கடுமையாகத் தாக்கிவருகின்றன. இதே சமயத்தில், கிழக்கே ஜப்பானைத் தீவிரமாக யுத்தத்தில் ஈடுபடும்படி தூண்டிவிடுவதும் இதற்காகத்தான்; ரஷியாவைப் பின்புறமிருந்து தாக்கும்படிகூட ஜெர்மனியர் ஜப்பானைத் தூண்டி வருகிறார்கள். ஜப்பான் சிங்கப்பூரில் வெற்றிபெறுமேயானால். அல்லது, பிரிட்டிஷார் சிங்கப்பூரிலிருந்து ரொம்பச் சாதுர்யமாக பின் வாங்குவார்களேயானால், பாஸிபிக்கின் தென் கிழக்கே ஜப்பானிய வெற்றி பூர்த்தியாகிவிடும். இதே சமயத்தில், மத்தியதரக் கடல், அட்லாண்டிக், லிபியா, துருக்கி முதலிய இடங்களில் ஜெர்மனியர் போராட்டத்தைத் தீவிரப் படுத்துவார்கள். பிரிட்டனையும், ஜெர்மன் விமானங்கள் தாக்கும். ஆகவே, பிரிட்டனும், நேச நாடுகளும், இப்பொழுதே எதிரிகளை முறியடிக்க ஒரு உறுதியான திட்டத்துடன் வேலை செய்ய வேண்டும். வெறும் யோசனை போட்டுக் கொண்டிருப்பதால் பயனில்லை; தீவிரமாக யுத்தத்தில் இறங்க வேண்டும். துணிந்தவருக்குத் துக்கமில்லை; வெற்றி, தோல்வி இரண்டையும் கடவுள் பக்கம் விட்டுவிட்டுத் தைரியமாகப் போராட்டத்தில் இறங்க வேண்டும். அப்படி இறங்கினாலொழிய, கிழக்கே ஜப்பானியர் நியூசென்சைச் சமாளிக்க முடியாது; ஐரோப்பாவிலும் நாஜியர் சூழ்ச்சியிலிருந்தும் தப்ப முடியாது! இது திண்ணம்.




# மனோரதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் தாய்லந்து எல்லையிலிருந்து குறுக்கே வந்து, இந்தத் துறைமுகத்தைப் பிடித்துக் கொண்டன. தாய்லாந்துக்கும், பர்மாவுக்கும் குறுக்கேயுள்ள குறுகிய இடம் இதுதான். ஆகவே, ஜப்பான் ராணுவங்கள் சுலபமாக டாவாய் துறைமுகத்தைப் பிடித்துக்கொண்டன. இங்கிருந்துதான் ஜப்பான், தாய்லந்து துருப்புகள், பர்மாவின் வடக்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

வடக்குப் பர்மாவில் தீவிரமான எதிர்ப்பு இருக்கலாம். அங்கு சீனத் துருப்புகள் வந்து குவிந்திருப்பதாகக் கேள்வி. ஆனால், பர்மாவை மூன்று புறமிருந்து தாக்க ஜப்பானியருக்கு வசதி இருக்கிறது. தெற்கிலிருந்தும் கடலிலிருந்தும், மேற்கே தாய்லந்திலிருந்தும் ஜப்பானியர் பர்மாவைத் தாக்க முடியும். டாவாய் இதற்கு வசதியான இடம். ஜப்பானியர் தாய்லந்திலிருந்து குறுக்கே வந்து, பர்மாவிலிருந்து பிரிட்டிஷ் படைகள் தெற்கு நோக்கிப் போகா வண்ணம் தடுத்து அணைபோட்டு விட்டார்கள். மலேயாவில் முன்னேறும் ஜப்பான் துருப்புகளைப் பாதுகாக்க ஜப்பானியர் எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுத்து வருகிறார்களென்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இதைச் சொல்லிக் காட்டி, பிரிட்டிஷார் திருப்தியடைகிறார்கள். ஆனால், இதுதான் யுத்த தந்திரம் என்பது பிரிட்டிஷாருக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால், ஜப்பானியர் பர்மாவில் முன்னேறுமுன் அவர்கள் தீவிரமாக முன்னேறிச் சென்று, மலேயாவில் முன்னேறும் ஜப்பானியர் துருப்புகளைப் பின்னாலிருந்து தாக்கியிருக்கமாட்டார்களா? இப்பொழுது ஏதோ பேசி மனச் சாந்தியடைகிறார்கள்! ஆபத்து காலத்தில், மனச் சாந்தி நல்லதுதான்; ஆனால், சதா காலமும் மனச் சாந்தியடைவதிலேயே திருப்தி கொண்டால், எதிரியை முறியடிப்பதுதான் எக்காலம்? எதிரியைத் தோற்கடிக்க யுத்த தந்திரம் வேண்டும்; மனக் கொதிப்பை கிளப்புவது யுத்த தந்திரமாகாது! பர்மாவிலும், இந்தியாவிலும் பிரிட்டிஷார் செய்வது இதுதான்! பர்மா பிரதம மந்திரி ஊசாவை ஏன் கைது செய்தார்கள்? இந்தியாவுக்கு ஏன் இன்னமும் சுதந்திரம் கொடுக்க மறுக்கிறார்கள்? பர்மாவுக்கும், இந்தியாவுக்கும் சுதந்திரம் கொடுப்பதாகப் பிரிட்டிஷார் இன்று ஒப்புக் கொள்ளட்டும்; யுத்தப் போக்கு அடியோடு மாறுகிறதா, இல்லையா என்று பார்ப்போம்.

---

**சமஷ்டி**—ஓர் மாயமான்

"சமஷ்டி", ராஜாங்கத்தின் ராஜீக நுட்பங்களையெல்லாம் சக்கை சக்கையாய்ப் பிளந்து கூறுகிறது.

புத்தகம் விலை ரூ. 1.
தபால் சிலவு அணா. 5.
மானேஜர்,
"தமிழ் மணி", மதராஸ்.

ந்தவிதமான அரவமும் கேட்க ல்லை. அப்புறம் தென்பக்கமுள்ள காட்டைகளை நோக்கி விரைந்து சன்ருன். அங்கு இருளில் ஒரு பண் பிரேதம்போல் தரையில் ந்ததைக் கண்டு திடுக்கிட்டு, அந் ப் பெண்ணைத் தூக்கிக்கோட்டைக் ள் மறைந்தான்!

மாய சேவகன் கோட்டைக்குள் மறைந்த சிறிது நேரத்தில், நந்தவனத் திலிருந்து ஒருவன் மட மடவென்று அரண்மனைக்குள் வந்தான்; நேரடியாக கமலம் அறைக்குச் சென்று மெதுவாகக் கதவைத் தட்டினுன்; சிறிது நேரம்வரை கதவு திறக்கப்பட வில்லை. மீண்டும் தட்டினுன்; கதவு திறந்தது. பாட்டி எதிரே வந்து நின் ருள். வந்தவன் மூச்சுப் பேச்சில்லாமல் உள்ளே சென்ருன்; பாட்டி அவனைத் தடுத்து நிறுத்த முயன் ருள், அவன் கேட்கவில்லை; முரட்டுத் தனமாக உள்ளேசென்ருன்; அவனைக் கண்டதும், கமலமும், இளவரசி மோகனுவும் திடுக்கிட்டு எழுந்து உட் கார்ந்தார்கள். வந்தவன் முகமூடி யணிந்திருந்ததால், அவன் யாரென் பதை அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை; ஆகவே, கமலம் முன் ஞல் வந்தாள்.

"நீ யார்?...எதற்காக இந்நேரத் தில் இங்கு வந்தாய்?...இது இளவரசியின்... அந்தப் புரமென்பது..."

"நான் யாரென்று அப்புறம் தெரிந்து கொள்ளலாம்...நான் ஒரு அவசர காரியமாக வந்தேன்..."

"அதெல்லாம் இருக்கட்டும்...நீ யார்?...எதற்காக இந்தச் சமயத்தில் இங்கு துணிந்து வந்தாய்?..இது ராஜ ஸ்திரிகள்...தஞ்சை இளவரசி இருக் குமிடமென்பது உனக்குத் தெரியாதா?..."

"தெரியும்......தெரிந்துதான் வந் தேன்...நீங்கள் பயப்பட வேண்டிய தில்லை...நான் வந்த காரியம் ரொம்ப முக்கியமானது..."

"நீயாரென்று சொல்லாமல் ஏதோ...கதை வளர்க்கிருய்..."

"நான் யார் என்பது அவ்வளவு அவசியமல்ல......நான் இளவரசி மோகனுவுக்கு ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன்..."

# ரஞ்சிதம் எறிந்த குண்டு!

## கமலம் ஏந்திய வாள்!

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

"இளவரசி மோகனுவக்கா?...... நீயா?...என்ன செய்தி?......யார் செய்தி அனுப்பியது?..."

"தஞ்சை இளவரசரே என்னை இங்கு அனுப்பி வைத்தார்?..."

"யார்?...தஞ்சை இளவரசரா?... அவர்தான்..." என்று கமலம் இழுத்தாள்; அவளுக்கு இன்னது பேச வது என்பது தெரியவில்லை; வந்தவனை நோக்கி மேலும் கீழும் பார்த்தாள்.

தஞ்சை இளவரசரிடமிருந்து வந்தவன் என்று மோகனு அறிந்ததும், அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அவள் மனம் துடித்தது; வந்தவனை உற்றுப் பார்த்தாள்.

"தஞ்சை இளவரசரிடமிருந்தா?"

"ஆம்...அவர் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்..."

"தஞ்சை இளவரசர் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருரா?.. எங்கே?..."

"நந்தவனத்தில்..."

"அவர் ஏன் இங்கு வரக் கூடாது?..."

"இங்கு வந்தால் ஆபத்து...அவர் உயிருக்கே...ஆபத்து என்பது உங்களுக்குத் தெரியாதா?..."

"தெரியும்...ஆபத்து வந்தாலும் பாதகமில்லை...அவரை இங்கு வரும்படி சொல்...நீ...நீ யார்?...அவரை உனக்கு எப்படித் தெரியும்?..."

"உங்களை எப்படியும் அவர் அழைத்துக் கொண்டு வரும்படி சொன்னுர்..உங்களுக்காக அவர் காத்திருக்கிருர்...அவர் உயிருக்கு எப்பொழுது, எந்த க்ஷணத்திலும் ஆபத்து வரலாம்...என் கடமை முடிந்தது...அதற்குமேல் உங்கள் இஷ்டம்..."

"சற்றுப் பொறு...நீ...நீ...இதோ வருகிறேன்...என் அண்ணு எங்கிருக்கிருர்?..."

"சமீபத்தில்தான்......அரண்மனை நந்தவனத்தில்தானிருக்கிருர்...நீங்கள் உடனே புறப்படவேண்டும்..."

இதைக் கேட்டதும் கமலம் ஆச்சரியமடைந்தாள்; மோகனு புறப்படத் தயாரானுள்; மோகனுவைத் தடுக்கவோ கமலம் துணியவில்லை;உடனே அவள் குறுக்கிட்டாள்.

"இளவரசி வரத் தயார்...ஆனுல், நீ யார்?..."

"நான் இளவரசரின் அந்தரங்க நண்பன்..."

"எங்கிருந்து வருகிருய்?..."

"யுத்த முனையிலிருந்து வந்திருக்கிறேன்..."

இதைக் கேட்டதும் இளவரசியும், கமலமும் இன்னமும் அதிகக் கலவரமடைந்தனர். வந்தவனை மோகனு நம்பினுள்; அவள் புறப்பட்டுச் செல்லவும் தயாரானுள். அவளைக் கமலம் தடுத்தாள்.

"அக்கா...சற்றுப் பொறுங்கள்... அவசரம் வேண்டாம்...எதையும் நிதானித்துச் செய்ய வேண்டும்..."

"கமலம்...வந்தவர் அண்ணுவாக இருந்தால்..."

"இருந்தால்தான் என்ன?...இந்த அறையில் அவருக்கு ஆபத்தில்லை. நீங்கள் பயப்பட வேண்டாம்..."

"மாய சேவகன் திடீரென இங்கு வரலாம்..."

"ஆம்...அது யோசிக்க வேண்டிய விஷயந்தான்...நீங்கள் தனிமையாகப் போகக் கூடாது...நானும் உங்களுடன் வருகிறேன்..."

"அண்ணு அதை விரும்பமாட்டார்..."

"அண்ணு விரும்பினுலுஞ் சரி... விரும்பாதுபோனுலுஞ் சரி...நீங்கள் தனிமையாகப் போகக்கூடாது...நான் உங்களுடன் வந்தே தீருவேன்..."

"கமலம்...நீ...நீ என்னுடன் வருவது..."

"மோகனு...கண்ணே...நீ தனிமையாகப் போகக்கூடாது...கமலம் சொல்லுவது நியாயம்..." என்று பாட்டி குறுக்கிட்டுச் சொன்னுள்.

"ஆம்...அக்கா...நான் சொல்லுவதைக் கேளுங்கள்..மாயசேவகன்வந்தால்கூட அதனுல் ஆபத்து ஒன்றுமில்லை...அவரை நான் சமாளித்துக் கொள்ளுகிறேன்...அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம்"

"அதை அண்ணு விரும்பமாட்டாரென்றுதான் நான் யோசிக்கிறேன்" என்ருள் மோகனு. இவர்கள் மூவரும் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததை வந்தவன் கூர்ந்து கவனித்தான். ஆனுல், அவர்கள் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்ததால், அவர்கள் பேசியது ஒரு வார்த்தைகூட அவன் காதில் விழவில்லை; ஆனுல், அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது; உடனே அவன் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"இளவரசி...நீங்கள் புறப்படுகிறீர்களா?...இல்லையா?...அல்லது... நான் போகட்டுமா?..."

"நான் தனிமையாக வர விரும்பவில்லை...கமலமும் என்னுடன் வருவாள்..."

"உங்களைத் தனிமையாக அழைத்துக் கொண்டுவர வேண்டுமென்றே இளவரசர் என்னிடம் சொன்னுர்"

"அப்படியா?...சரி நான்...நான்" என்று மோகனு நேரடியான பதில் சொல்ல முடியாமல் திண்டாடினுள். இந்தச் சமயத்தில் கமலம் திடீரென அவள் படுக்கையின் கீழ் எப்பொழுதும் தயாராக வைத்திருக்கும் வாளைக் கையில் எடுத்துக்கொண்டு, அங்கு வந்திருந்தவனைத் தாக்க துணிந்தாள். வந்தவன் திடுக்கிட்டுப் போய் பின்னுல் இரண்டடி எடுத்து வைத்து, அவனும் கையில் வாளை உருவினுன். முன் நோக்கிப் பாய்ந்து கமலம் ஏந்திய வாளைத் தட்டி பெறிவதற்குள் அவன் முதுகில் படீரென்று ஒரு உதை பலமாக விழுந்தது! மறு விநாடியில் அவன் முகங் குப்புற விழுந்தான்! அவன் தட்டுத் தடிமாறி எழுந்திருப்பதற்குள், கமலம் ஏந்திய வாள் அவன் முதுகின்மேல் வந்து நின்றது!

(தொடரும்)


## பலவீனத்தைப் போக்கி

### சி. எம். சாமி

# மன்மதக் குளிகை

**வல்லமையை உண்டாக்குகிறது.**

நரம்புத் தளர்ச்சிக்கு இதைவிடச் சிறந்த மருந்து இல்லை.

இதனை உபயோகித்த ஆயிரக்கணக்கானவர்கள் இதன் மேன்மையை பாராட்டுகின்றனர். இது தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், மேகவெட்டை, அசதி, இடுப்புவலி, இரத்தக்குறைவு, பலவீனம், முதலியவைகளை போக்கி தாதுபுஷ்டி, இரத்த விருத்தி, இல்லற இன்பம் முதலியவைகளை அடையச் செய்கிறது.

இது மாத்திரமல்ல சரீரத்திலுள்ள ஏனைய கோளாறுகளையும் நிவர்த்திக்கிறது.

இன்றே ஆர்டர் செய்யுங்கள் 20-குளிகை விலை ரு. 2—0—0.

தலைமை ஆபீஸ்: மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S.I.

பிராஞ்சு:-(1) 2-88 அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை
" (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.



## ஆப்ரேஷன் தேவை இல்லை

தொண்டையிலும், உள் நாக்கின் இரு புறங்களிலும், நாசித் துவாரங் களிலும் சதை வளர்ந்து சுவாச அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்களுக்கு "டான்ஸ்லிட்" மருந்து அற்புதமாகக் குணப்படுத்தும்.

SOLE DISTRIBUTORS:
ALLEN CLINIC
ROYAPETTAH, MADRAS.

கீழ்க்கண்ட கம்பெனிகளில் வாங்கிக்கொள்ளலாம்.

ஸ்பென்சர் அண்ட் கம்பெனி, தாதா அண்ட் கம்பெனி, அப்பா அண்ட் கம்பெனி, சென்னை. பி. எம். ஸாவரி அண்ட் கம்பெனி, பம்பாய். டி. என். சீ. நாகலிங்கம் பிள்ளை, மதுரை. கும்பகோணம் டிரக்ஸ்டோர், கும்பகோணம். சீதாராமன் அண்ட் பாய் பிரதர்ஸ், பெங்களூர் சிட்டி.

**இந்தியா**
தனிப் பிரதி
விலை ஒரு அணா.
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0.
இலங்கையில்
தனிப் பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

# தமிழ் மணி

**பர்மா**
தனிப் பிரதி 0-1-
வருட சந்தா ரூ.
**மலாய்**
தனிப்பிரதி சதம்
வருட சந்தா ரூ.
ஒரு வருஷத்திற்
குறைந்த சந்தாவு
குப் பத்திரிகை
அனுப்பப்பட மாட்
டாது.

ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி.



பிரிட்டிஷ் கடற்கரை யோரமெங்கும் தற்காப்பு ஏற்பாடுகள் செய்திருப்பதோடு, கப்பலிலும் பிரிட்டிஷார் தற்காப்பு ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஏராளமான மோட்டார் படகுகள், இயந்திர பீரங்கிகளுடன் பிரிட்டிஷ் கடற்கரை யோரமெங்கும் பாதுகாப்புச் செய்து வருகின்றன. மோட்டார் படகிலிருந்துகொண்டு, திடீரெனப் படையெடுத்து வரும் ஜெர்மன் விமானங்களையும் ஈ படகுகளையும் குறிவைத்துச் சுடுவதைப் படத்தில் காண்க.



மத்தியதரைக் கடலில், ஒரு ஜெர்மன் "ஈ" படகுக்கும், ஒரு பிரிட்டிஷ் விமானத்துக்கும் நடந்த போராட்டத்தில், பிரிட்டிஷ் விமானி ஜெர்மன் ஈ படகை எதிர்த்துச் சுட்டு, அதை ஓட விடாமல் தடுத்துவிட்டதால், விமானியே அந்தப் படகில் இறங்கி, அதை அருகிலுள்ள ஒரு பிரிட்டிஷ் துறைமுகத்துக்கு ஓட்டிக்கொண்டு போய்ச் சேர்த்தார். இந்தப் போராட்டத்தில் அந்த பிரிட்டிஷ் விமானி காட்டிய தீரம் பாராட்டத்தக்கதே.





பிரிட்டிஷ் கடற்கரை யோரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட ஜெர்மன் வெடிகுண்டு விமானம். கடலிலிருந்து அந்த விமானத்தை வெளியில் எடுப்பதைப் படத்தில் காண்க. இது போன்ற விமானங்களின் எஞ்சின் அமைப்பு முதலியவைகளைத் தெரிந்துகொள்ளுவதோடு, அவற்றைப் பழுது பார்த்து மீண்டும் உபயோகிக்க முயற்சிக்கின்றனர். இன்றேல், அந்த விமானங்களில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வேறு விமானங்களைச் செய்து கொள்ளுகிறார்கள்.

ஹாலந்து இளவரசர். பிரிட்டிஷ் விமானப் படையில் சேர்ந்து, ஜெர்மனியரை எதிர்த்துச் சண்டை செய்து வருகிறார். ஹாலந்து இளவரசர் ஒரு போர் விமானத்தில் பறந்து செல்லத் தயாராக இருப்பதைப் படத்தில் காண்க.

ரஷியப் போர் முனையில், சுட்டு வீழ்த்தப்பட்ட ஜெர்மன் வெடிகுண்டு விமானம். இதைப் போன்ற பல ஆயிரக்கணக்கான ஜெர்மன் விமானங்களை ரஷியர் நாசமாக்கியிருக்கின்றனர்.

Edited Printed and Published by P. ALBIN FERNANDO, at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. MADRAS.